


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 50 ○ 03.11.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்






## சஜித்தை ஆதரிக்கும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை எப்படி ஏற்கமுடியும்?

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முழு ஆதரவு சஜித்துக்கு



## சுர்ஜித்தும் ஈழமண்ணில் புதைந்த குழந்தைகளும்

தீபச்செல்வன்

## தமிழூர்கள் வாக்களிப்பதற்கு சுட்டிக் காட்டக்கூடிய நிலையில் எந்த வேட்பாளருமில்லை!



தமிழ்மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு நேர்காணல்

# சஜித்தை ஆதரிக்கும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை எப்படி ஏற்க முடியும்?

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

ஐந்து தமிழ் கட்சிகளுடன் இணைந்து 13 அம்ச கோரிக்கையை முன்வைத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அந்த கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியைப் பெறாத நிலையில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டை எடுத்திருப்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும் என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி எழுப்பியிருக்கிறது. பல்கலைக்கழக மாணவர்களால் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான ஒரு முயற்சியை நீர்த்துப்போகச் செய்யும் செயற்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது எனவும் அவதானிப்பு மையம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

இது தொடர்பில் மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது வருமாறு: “நடைபெறப்போகும் சனாதிபதித் தேர்தலில் புதிய சனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை முழு அளவில் ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை எடுத்துள்ளதாக தெரிகிறது. இது தொடர்பில் உத்தியோகப்பூர்வமான அறிவித்தல் இன்னும் ஒருசில தினங்களில் வெளியிடப்படும் எனவும் தெரிகிறது. ஐந்து கட்சிகளுடன் இணைந்து சனாதிபதி வேட்பாளர்களைச்



சந்திப்பது எனவும் இணக்கம் காணப்பட்ட 13 அம்ச கோரிக்கையை அவர்கள் முன்பாக வைத்து பேரம் பேசுவது எனவும் தீர்மானிக்கப்பட்டபோதிலும், தமிழரசுக் கட்சியின் தலைமை வழமைபோல் தன்னிச்சையாகவே செயற்பட்டது. தனியாகச் சென்று ஐ.தே.க. தலைமையுடன் பேசியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருக்கும் ரெலோ, புளொட் போன்ற கட்சிகளும் இந்த விடயத்தில் கேள்வி எழுப்பாமல், தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளுக்கு ஆதரவாக தலையசைத்துக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையே வழமைபோல எடுத்திருக்கின்றன. 5 தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது தயாரிக்கப்பட்ட 13 அம்ச கோரிக்கைகளை இரண்டு சனாதிபதி வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பில் தமிழ் கட்சிகளை சந்தித்து பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கு கூட அவர்கள் தயாராக இருக்கவில்லை. இது 13 அம்ச கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராகவில்லை என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.

அதனால் தமிழ்க் கட்சிகள் தங்களுடைய நிலைப்பாட்டை உடனடியாக மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என ஏனைய கட்சிகள் முன்வைத்த கோரிக்கையை தமிழரசுக்கட்சி நிராகரித்தது. சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனம் இன்னும் வரவில்லை எனவும், அது வந்தபின்னர் அதனைப் பார்த்து முடிவு

தொடர்ச்சி 4ம் பக்கம்

## பல்கலை. மாணவர்கள் முயற்சியால் தப்பித்தது கூட்டமைப்பு

## தோற்றுப்போன இராஜதந்திரத்துக்கு வெள்ளை அடிப்பு ஏன்?

### தமிழ் புத்திஜீவிகள் கேள்வி

தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனஅழிப்பிலிருந்து இலங்கை அரசை பாதுகாத்துவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது, தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளை புறந்தள்ளி புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொண்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் போதும் வரவுசெலவுத் திட்டங்களின் போதும் எந்தவொரு முன் நிபந்தனைகளையும் முன்வைக்காது இலங்கை அரசைக் காப்பாற்றி வருவதால் கூட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர். இவ்வாறான சூழலில் சனாதிபதித் தேர்தலை மையமாக வைத்து மாணவர் சமூகம் எடுத்த முயற்சி கூட்டமைப்பின் கடந்த கால தவறுகளை மூடிமறைத்து தப்பித்துக்கொள்வதற்கான சூழ்நிலைகளை தோற்றுவித்துள்ளதாக தமிழ் புத்திஜீவிகள் இலக்கு மின்னிதழிடம் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்... பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியில் 13அம்சக்கோரிக்கைகளை முன்வைக்கப்பட்ட



பொது இணக்கப்பாட்டில் கையொப்பம் இட்டதன்மூலம் அந்தக்கட்சிக்கு தன்மீதிருந்த அனைத்து விமர்சனத்தையும், கறைகளையும் நீக்கிக்கொண்டு வெள்ளையடித்துக் கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் நலன் சார்ந்து தமிழ்த்தேசிய கட்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டாலும் மேற்படி கொள்கைகளை கைவிட்டு சுயலாபத்தை நோக்கிய அரசியல் செயற் பாடுகளை முன்னெடுப்பது என்ற தனது

தொடர்ச்சி 5ம் பக்கம்

## ரெலோவிலிருந்து விலகினார் சிவாஜிலிங்கம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தவிசாளராக பதவி வகித்து வந்த எம்.கே சிவாஜிலிங்கம் அந்த அமைப்பின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். சிவாஜிலிங்கம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்த நிலையில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக கூறி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்திருந்தது. இதனையடுத்து தானாகவே கட்சியில் இருந்து விலகுவதாக சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார். இதற்கமைய கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து தான் விலகுவதாக கட்சியின் செயலாளர் நாயகமான சட்டத்தரணி என். சிறிகாந்தாவுக்கு கடிதத்தை இன்று காலை நேரடியாக கையளித்துள்ளார். இதேவேளை சிவாஜிலிங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை 9ஆம் தேதி திருகோணமலையில் வெளியிடுகிறார்.



## அதிகார பகிர்வு விடயத்தில் சஜித்தின் விஞ்ஞாபனத்திலும் வார்த்தை விளையாட்டு



புதிய சனநாயக முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெவ்வேறுபட்ட வார்த்தைப்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, நாட்டின் தன்மை விடயத்தில் தமிழில் ‘ஒருமித்த நாட்டிற்குள் அதிகாரப்பகிர்வு’ என்றும் சிங்களத்தில் ‘ஏக்கிய ராஜ்ஜியத்தினுள் (ஒற்றை ஆட்சியினுள்) அதிகார பகிர்வு என்றும் ஆங்கிலத்தில் இச்சொற்பதங்களுக்கு விதிவிலக்காக யுனிற்றரி (ஒற்றை ஆட்சி) என்பதை சுருக்கி ‘யுனிற்றி’ (ஒற்றுமை) நாட்டிற்குள் அதிகார பகிர்வு என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது தமிழ் மக்களை சென்றடைவதற்காக ஒருவார்த்தைப் பிரயோகத்தினையும், சிங்கள மக்களை சென்றடைவதற்காக பிறிதொரு வார்த்தைப் பிரயோகத்தினையும் வெளிநாட்டு தூதுவர்கள் இராஜ தந்திரிகளை சென்றடைவதற்காக மற்றொரு வார்த்தை பிரயோகத்தினையும் சஜித் கையாண்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஏற்கனவே கிடப்பில் போடப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பிற்கான இடைக்கால அறிக்கையிலும் நாட்டின் தன்மை இவ்வாறு மும்மொழிகளிலும் ஒருமித்த நாடு, ஏக்கிய ராஜ்ஜிய, யுனிற்றரி ஸ்டேட் என்று வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வெவ்வேறு பொருள்கோடல்கள் அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் முழு ஆதரவு சஜித்துக்கு

## விரைவில் அறிவிப்பு வெளிவரும்

எட்டாவது சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஐ.தே.கவின் பிரதி தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவுக்கு தமது பூரணமான ஆதரவை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இந்நிலையில் கூட்டமைப்பின் பிரதான தரப்பான இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு அக்கட்சியின் வவுனியா மாவட்டக் கிளை அலுவலகமான 'தாயகம்' பணிமனையின் பிரதான கேட்போர் கூட்டத்தில் பலமணி நேரங்களை கடந்து நடைபெற்று வருகின்றது.

கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறும் இந்த மத்திய குழுக் கூட்டத்தில் சனாதிபதி தேர்தலில் புதிய சனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதஸவை ஆதரிப்பதற்கான காரணங்கள் மற்றும் சனதிபதி தேர்தலில் கூட்டமைப்பின் பங்களிப்புச் செயற்றிட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இதில் கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், சிறிநேசன், சி.யோகேஸ்வரன், சுமந்திரன், சாந்தி சிறிஸ்கந்தராயா, யாழ், மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை தலைவர்களான ஆர்னோல்ட், தி.சரவணபவன், வடமாகாண முன்னாள் அவைதலைவர் கே.சிவஞானம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான கே.சயந்தன், குருகுலராஜா ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து சுமந்திரன் வலியுறுத்தி பேசியதாகவும் செய்திகள் தெருவிக்கின்றன.

# தமிழ்மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் : கருத்தரங்கம்



தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிவகரன் தலைமையில் ‘சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள்’ யாருக்கு? ஏன், எதற்காக வாக்களிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் அறிவூட்டல் கருத்தரங்கு இன்று யாழில் மக்கள் மன்றத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்புப் பேச்சாளர்களாக ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்தின், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம், தமிழ்மக்கள் கூட்டணியின் ஊடக பேச்சாளர் அருந்தவபாலன், தமிழர் மரபுரிமை மையத்தின் இணைத் தலைவர் நவனீதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஸ், ரெலோ அமைப்பின் சிறீகாந்தா, பசுமைஇயக்கத்தின் தலைவர்அங்கரநேசன், அருட்தந்தை ஜெயகுமார் அடிகளார், சுவாமி சிதாகாசானந்தா சின்மையாமிசன், ஆய்வாளர் நிலாந்தன், ஊடகவியலளார் திருமலை நவம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அனந்தி சசிதரன், பல்கலைக்கழக மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என நுற்றுக்கணக்கனோர் கலந்து கொண்டனர்.



# விஞ்ஞாபனங்களும் தமிழ்க் கட்சிகளும்

சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரேமதாசவின் விஞ்ஞாபனமும் வெளியியாகியுள்ளது. தம்மால் முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித்துக்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டை அறிவிக்கப்போகின்றது. பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட 5 தமிழ்க் கட்சிகளிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் ஐந்து கட்சிகளும் இணைந்தே சனாதிபதி வேட்பாளர்களைச் சந்தித்துப் பேசுவதற்குத் தீர்மானித்திருந்தன. ஆனால், இரண்டு பிரதான வேட்பாளர்களும் சந்திக்க மறுத்துவிட்ட நிலையில், விஞ்ஞாபனங்களைப் பார்த்துவிட்டு முடிவெடுப்போம் என தமிழ்க் கட்சிகள் காத்திருந்தன. ஐ.தே.க. தலைமையை தனியாகச் சந்தித்த தமிழரசுத் தலைமை நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே, "விஞ்ஞாபனத்துக்காக காத்திருத்தல்" என்ற முடிவு எடுக்கப்பட்டது.

விஞ்ஞாபனம் வர முன்னரே சஜித்தை ஆதரிப்பது என தமிழரசுக் கட்சித் தலைமை தீர்மானித்திருந்தது. விஞ்ஞாபனம் வந்தவுடனடியாகவே தம்மால் முன்வைக்கப்பட்ட விடயங்களில் பெரும்பாலானவை அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற கருத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முன்வைத்தார். கூட்டமைப்பின் ஏனைய இரண்டு பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோ என்பனவும் தமிழரசுக் கட்சியின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு சஜித்தை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை எடுக்கும் நிலைதான் உள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த ஐந்து கட்சிகளில் ஒன்றான, தமிழ் மக்கள் கூட்டணி, மக்கள் தாமாகவே முடிவெடுத்து வாக்களிக்கட்டும் என்ற தமது நிலைப்பாட்டை முன்னரே அறிவித்திருந்தது. பிரதான சிங்கள வேட்பாளர்களில் யாருக்கும் வாக்களிக்குமாறு கோர முடியாதிருப்பதாக விக்கினேஸ்வரன் சுட்டிக் காட்டியிருந்தார். மற்றொரு கட்சியான ஈ.பி.ஆர். எல்.எப். கூட இதே நிலைப்பாட்டை அறிவிக்கவிருக்கின்றது. இதனால், 13 அம்சக் கோரிக்கையில் இணைந்த ஐந்து தமிழ்க் கட்சிகள் பிளவுபட்டுள்ளன. இனவாதக் கட்சிகளோ, பிரதான போட்டியாளரான கோத்தாபய ராஜபக்ச தரப்பினரோ சிங்கள மக்களைக் குழப்பிவிட முடியாதவகையில், சிறுபான்மை—யினருடைய நம்பிக்கையைப் பெறத் தக்கதாக சில விடயங்களை சஜித் தனது விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். கோத்தபயவின் விஞ்ஞாபனத்துடன் ஒப்பிடும் போது, முன்னேற்றகரமான சில அம்சங்கள் இதில் உள்ளன. ஆனால், ஐந்து தமிழ்க் கட்சிகளால் அண்மையில் முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளிலிருந்து இது வெகு தொலைவில் உள்ளது.

கோதாபயவின் விஞ்ஞானம் இன நெருக்கடி குறித்து எதுவுமே பேசாத ஒன்றாக இருந்தது. புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதை மட்டும் அவர் தெரிவித்திருக்கின்றார். ஒற்றையாட்சி என்பதும், பௌத்தத்துக்கு முன்னுரிமை என்பதும் அவரது விஞ்ஞாபனத்தில் உள்ள முக்கிய அம்சங்கள். ஆக, அவர் சனாதிபதியானால் சிங்கள — பௌத்த நாடாகவே இலங்கை மாறும். சஜித்தின் விஞ்ஞாபனத்தில், "தற்போது முன்னெடுக்கப்படும் அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் அதற்கான அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து தாமதமின்றி முன்னெடுக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ரணில் தெரிவித்திருப்பதைப் போல, "அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் விட்ட இடத்திலிருந்து தொடரும்" என்பதைத்தான் சஜித்தும் குறிப்பிட்டிருக்கின்றார்.


கடந்த நான்கு வருடகாலமாக முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள், மற்றும் அது தொடர்பில் வழிநடத்தல் குழுவினால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை என்பன தொடர்பில் தமிழ் மக்கள் சார்பில் விமர்சனங்கள் உள்ளன. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்தில் அரசாங்கத்தைவிட அதிகளவு அக்கறையாக செயற்பட்டது கூட்டமைப்புத்தான். அந்த முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதென்பது கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தும் ஒரு உபாயமாக இருக்கலாம். இரு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில் கடும் போட்டி உள்ளது. கோத்தாபயவுக்கு சிங்கள வாக்குகள் அதிகமாகவுள்ளது. அதனால், சிறுபான்மையினருடைய வாக்குகளை முடிந்தளவுக்கு அள்ளிச் செல்லவேண்டிய தேவை சஜித்துக்குள்ளது. அந்த வாக்குகளை இலக்கு வைத்தாலும், வாக்குறுதிகள் எதனையும் வெளிப்படையாகச் சொல்வதற்கும் சஜித் தயங்குகின்றார்.

தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிப்பதில் வெறுமனே தேர்தல் விஞ்ஞாபனங்களை மட்டும் கவனத்திற்கொள்ள முடியாது. கல்முனையை தரமுயர்துவதாக கூட்டமைப்பின் தலைமைக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கூட பிரதமரால் காப்பாற்ற முடியவில்லை. இதற்காக பல போராட்டங்களும், பல சுற்றுப் பேச்சுக்களும் நடைபெற்றன. நிர்வாக ரீதியாகத் தீர்க்கப்படக்கூடிய இவ்வாறான ஒரு சிறிய விஷயத்தைக் கூட அரசாங்கத்தினால் தீர்க்க முடியவில்லை. இந்த நிலையில் பெரிய விஷயங்களை பதவிக்கு வரப்போகும் புதிய சனாதிபதியால் எப்படிச் செய்து முடிக்க முடியும்? இதனைவிட கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு அம்சமும் உள்ளது. அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின்படி வரப்போகும் சனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கும். நிறைவேற்று அதிகாரங்களில் பெரும்பாலானவை பாராளுமன்றத்துக்கும், அமைச்சரவைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் விஞ்ஞானங்களில் சொன்னவற்றைச் செய்வதற்கான அதிகாரங்கள் சனாதிபதியிடம் இல்லை. குறிப்பாக அரசியலமைப்புச் சீர்திருத்தம் போன்றன பாராளுமன்றத்தினாலேயே கையாளப்படும். ஆக, வெறுமனே விஞ்ஞாபனங்களை மட்டும் பார்த்து முடிவெடுத்துவிட முடியாது என்பதே உண்மை.

**- ஆசிரியர்**

# சிறீலங்காவின் அடுத்த ஆட்சியாளர் சர்வதேசத்திடம் மண்டியிடுவது நிச்சயம்

## பேராசிரியர் ஜயதேவ உயன் கொட



சர்வதேசத்திடம் மண்டியிடப் போதில்லை. அத்தரப்புக்களின் தலையீடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என்று பிரதான வேட்பாளர்கள் பகிரங்கமாக கூற ஜினாலும் அவர்களால் அவ்வாறு செயற்பட முடியாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேசத்தின் பிடிக்குள் கட்டுப்படுவார்கள் என்று பேராசிரியர் ஜயதேவ உயன் கொட தெரிவித்தார்.

சர்வதேச அரங்கில் நடைபெற்ற அண்மைக்கால தேர்தல்களில் தேசப்பற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் போக்கு காணப்படுவதால் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக நடைமுறைச்சாத்தியமற்ற பல்வேறு விடயங்களையும் கருத்துக்களையும் முன்வைக்கின்றார்கள் என்றும் பேராசிரியர் உயன்கொட சுட்டிக்காட்டினார்.

சுதந்திரத்தின் பின்னரான சிறீலங்காவின் தேர்தல்களில் வெளிநாடுகளில் தலையீடுகள் தொடர்ச்சியாக இருந்துகொண்டு வருகின்றன. பராந்தியத்தில் அதிகாரமிக்க நாடுகளும் தலையீடுகளைச் செய்துள்ளன. அதுவொன்றும் இரகசியமான விடயம் இல்லை எனவும் இம்முறையும் அதன் தொடர்ச்சி இருப்பதாகவும் அவர் குறிப்பட்டார்.

நாட்டின் பிரஜைகளின் வாக்குகள் வெற்றியை தீர்மானிப்பதாக இருந்தாலும் சர்வதேச, பிராந்திய சக்திகளின் தலையீடுகள் பின்னணியில் இருக்கின்றன. 2015 இலும் இவ்வாறான நிலைமைகள் இருந்தன. ஆகவே இப்போது இல்லாதிருக்கும் என்று கூற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் சீனாவுடன் நெருக்கமான உறவுகளை பேணிக் கொண்டு சீனா சார்ந்து செயற்படுகின்றது என்ற பிரதான குற்றச்சாட்டும் கடுமையான விமர்சனங்களும் 2015ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தரப்பினரால் முன்வைக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அவ்வாறான விமர்சனங்களை முன்வைத்து ஆட்சிப்பொறுப்பினை எடுத்திருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் சீனாவை நோக்கி தவழ்ந்து செல்லும் நிலைமை ஏற்பட்டிருந்தது. ரணில் நட்பு சக்திகளான அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் சிறிலங்காவின் கடன் சுமையை போக்கவல்ல நிதிபங்களிப்பினை ஆற்றும் சக்தியைக் கொண்டிருக்கவில்லை. சீனாவிடம் தான் தான் நிதிப்பங்களிப்பினைச் செய்யும் சக்தி வலுவாக இருந்தது என்றும் சுட்டிக் காட்டினார்.

# சஜித்துடன் சந்திரிகா அம்மையார் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் கொந்தளிப்பு!

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மத்தியசெயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி இரவு7 மணிக்குக் கட்சித் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்வதே இந்தக் கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை ஆதரிப்பதற்குஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முடிவெடுத்தநிலையில், அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர்.

அத்துடன்,'சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பு' எனும் இயக்கத்தை உருவாக்கி, எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் விசேட மாநாடொன்றையும் நடத்தவுள்ளனர்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சியின்முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் தலைமையின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் வழிகாட்டலுடன் இந்தக் குழு இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வமைப்பின் சார்பிலேயே சந்திரிக்கா அம்மையார், சஜித்துடன் நேற்று முன் தினம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார் என உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பின் மாநாடு காலையில் நடைபெறும் நிலையிலேயே அன்றைய தினம் இரவு சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடுகின்றது. இந்த மாநாட்டில் பங்கேற்பவர்களை கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தும் முடிவு இதன்போது எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## நாடாளுமன்றில் கடைசி உரை அனலைக் கக்கப் போகும் மைத்திரி

சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம், வரும் 16ஆம் நாளுக்குப் பின்னர் எந்த நேரத்திலும் முடிவடையலாம். இந்த நிலையில், சிறிலங்கா அதிபராக, நாடாளுமன்றத்தில் தனது கடைசி உரையை அடுத்தவாரம் நிகழ்த்தவுள்ளார்.

வரும் 7ஆம் நாள், வியாழக்கிழமை அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் தனது உரையில் கவனம் செலுத்தவுள்ள முக்கியமான விடயம் என்னவென்று தெரியவரவில்லை. எனினும், மிகவும் சர்ச்சைக்குரிய, முக்கியமான உரையை அவர் நிகழ்த்துவார் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தமிழரசு கட்சி தனித்து முடிவு நெருக்கடியில் புளொட், ரெலோ

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று சம்பந்தன் தலைமையில் வவுனியாவில் நடைபெற்று வருகிறது. இதன்போது எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் புதிய சனநாயக முன்னணின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாளை முதல் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. முதலாவது கூட்டம் மன்னாரில் நாளை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் புளொட், ரெலோ ஆகியவற்றுடன் தமிழரசுக்கட்சி கலந்தாலோசித்து கூட்டமைப்பாக முடிவை அறிவிக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஏனைய இரண்டு பங்காளிகளான ரெலோவும், புளொட்டும் தர்மசங்கடத்திற்கு உள்ளாகியுள்ளன.

அத்துடன் சனாதிபதித் தேர்தல் குறித்த முடிவை கூட்டமைப்பாக ஆகக்குறைந்தது ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாகவாவது வெளியிடுமாறு மாவை.சேனாதிராஜாவிடம், செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் கோரியுள்ளதாக அறியமுடிகின்றது.

2ம் பக்கத் தொடர்ச்சி ..சஜித்தை ஆதரிக்கும்


எடுப்போம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனம் வருவதற்கு முன்னதாகவே தங்களுடைய முடிவை அவர்கள் எடுத்துவிட்டார்கள். சஜித்தின் விஞ்ஞாபனம் வெளிவந்த உடனடியாகவே தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பெரும்பாலானவை அவற்றில் உள்ளடக்கப்பட்டு இருப்பதாக தெரிவித்த தமிழரசுக் கட்சி, அவரை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டையும் மறைமுகமாக வெளியிட்டது. உத்தியோகப்பூர்வமாக கட்சியின் செயற்குழு பாராளுமன்ற குழு என்பவற்றில் நிறைவேற்றிய பின்னர் அந்த முடிவை உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பார்கள்.

சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனத்தில் தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான தெளிவான பதில் எதுவும் இருக்கவில்லை. அரசியலமைப்பை உருவாக்குவதற்கான பணிகள் தொடரும் என்பது மட்டுமே அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான அம்சமாகும். பெரும்பாலான கோரிக்கைகளுக்கு அதில் திட்டவட்டமான பதில் இல்லை. இந்த நிலைமையில் தன்னிச்சையாக சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளியான தமிழர் கட்சி எடுத்திருப்பது மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான முயற்சியை நீர்த்துப்போகச் செய்கின்றது.

அனைத்துக் கட்சிகளும் இணைந்து சனாதிபதி வேட்பாளரை சந்திப்பது என்ற தீர்மானத்தை சுமந்திரன் ஏற்றுக்கொண்டு அறிவித்த பின்னர், தனியாகச் சென்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது என்பது, கூட்டுப் பொறுப்பில் இருந்து விலகும் ஒரு செயற்பாடு. எந்த நிலையிலும் அவர்களை நம்பமுடியாது என்பதே மீண்டும் நிரூபமணமாகி உள்ளது. அதனைவிட ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையுடன் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் உள்ள தொடர்புகளையும் இது வெளிப்படுத்துவதாகவே கருதவேண்டும். என்றும் அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

# யாழ் பல்கலையில் மொழிபெயர்ப்புத்துறை கண்காட்சி

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழி பெயர்ப்புத்துறை மாணவர்களால் சர்வதேச மொழிபெயர்ப்புத் தினத்தை எடுத்துக்காட்டும் முகமாக விழிப்புணர்வு கண்காட்சி ஒன்று நேற்று (02) நடத்தப்பட்டது. சர்வதேச மொழி பெயர்வு தினத்தை உலகிற்கு எடுத்துகாட்டும் முகமாக மொழி பெயர்ப்பு சம்மந்தமாகவும் இலங்கையில் மொழி பெயர்ப்பு எவ்வாறு உள்ளது என்பது தொடர்பாகவும் தெளிவூட்டும் இக்கண்காட்சி பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளள கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. மொழி பெயர்ப்புத்துறை கற்கைநெறியின் இணைப்பாளர் க.கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தகுதிவாய்ந்த அதிகாரி கே.கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக யாழ் கலைப்பீட பீடாதிபதி கே.சுதாகரும் கலந்து கொண்டனர்.**










## கட்சிகளை ஒருங்கிணைக்கும் இறுதி முயற்சியில் பல்கலை மாணவர்கள்

வடக்கு கிழக்கு பல்கலை மாணவர்களின் ஒருங்கிணைப்பில் ஐந்து கட்சிகள் இணைந்து எடுத்துள்ள 13 அம்சக் கோரிக்கைளை முன்வைத்து தமிழ் தேசிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான மூன்று வேட்பாளர்களும் தயாராக இருந்திருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், தபால் மூல வாக்களிப்பு முன்னதாக அறிவிப்பொன்ற விடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இணக்கப்பாட்டினை எட்டியிருந்த கட்சிகளில் சில இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்ததன் காரணத்தால் நிபந்தனைகளை யாருமே ஏற்காத நிலையில் தபால் மூல வாக்காளர்களே சுயதீனமாக தீர்மானத்தினை எடுத்து வாக்களிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அனைத்து வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளியிடப்பட்ட பின்னர் மீண்டும் ஐந்து கட்சிகளும் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இறுதியாக நடைபெற்ற ஐந்து கட்சிகளின் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் எப்போது கூடுவதென்று திகதியிடப்படாத நிலையிலேயே அக்கூட்டம் நிறைவடைந்திருந்தது. இந்நிலையில் தற்போது அனைத்து பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்படுத்தப்பட்ட நிலையில் மீண்டும் ஐந்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர். இன்று ஞாயிற்றுக் கிழமை அல்லது நாளை திங்கட் கிழமைக்குள் ஐந்து கட்சிகளுக்கிடையிலான சந்திப்பொன்றை மீண்டும் ஏற்படுத்துவதற்கு மாணவர்கள் முனைப்புக் காட்டுக்கின்றர்.

ஏனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழரசுக்கட்சி ஏறக்குறைய தீர்மானம் எடுத்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களே யாருக்கு வாக்களிப்பது என்று அவர்களே தீர்மானிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணி அறிவித்துள்ள நிலையிலும் மீண்டும் ஐந்து கட்சிகளின் சந்திப்பு சாத்தியமாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2ம் பக்கத் தொடர்ச்சி ..பல்கலைக்கழக

நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமுமில்லாதிருக்கும் கூட்டமைப்பானது நீதியரசர் விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோரையும் ஏமாற்றி கபடமின்றி நெஞ்சுரத்துடன் களமாடும் பல்கலை மாணவர்களையும், ஆதிக்கம் செலுத்தும் ஆளுமையற்ற சில சிவில் தரப்பினையும் இலகுவாக கையாண்டு தமிழ்க் கட்சிகளின் ஒருங்கிணைவு சந்தர்ப்பத்தினை இழந்த செல்வாக்கினை புத்துணர்வுடன் மீளப்பெறுவதற்கு சாணக்கியமாக பயன்படுத்தியுள்ளதே யதர்த்தம் என்றும் மையம் குறிப்பிட்டள்ளது. எட்டாவது சனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியை அதிகரிக்கச் செய்யும் ஒரே நோக்கில் தமிழர் தாயக பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள ஆறு அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்தனர்.

இடைக்கால அறிக்கையை நிராகரிக்கும் கோரிக்கையை உள்ளீர்க்க மறுக்கப்பட்டமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியேறவும் ஏனைய ஐந்து கட்சிகளும் 13அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து பிரதான வேட்பாளர்களிடத்தில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டு அதற்காக கால அவகாசத்தினை வேட்பாளர்களிடத்தல் கோரும் பொறுப்பு சுமந்திரன் என்ற தனியொருவரிடத்திலேயே ஒப்படைக்கப்பட்டது.

ஐந்து கட்சிகளின் தலைவர்களை சந்திப்பதற்காக மிகப்பெரும் ஏற்பாட்டைச் செய்யும் பணியொன்று தனியொருவரிடத்தில் கையளிக்கப்பட்டமையே நிலைமைகள் மோசமடைவதற்கு முதற்காரணமாக அமைந்துள்ளது. அடுத்தாக பல்கலைக்கழக மாணவர்கள் இருவார காலத்தின் பின்னர் அவசரமாக அழைப்பு விடுத்தபோது மீண்டும் 28ஆம் திகதி கூடிய ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகள் அடுத்த கட்டமாக செய்ய வேண்டிய விடயங்களை தாமக்குள் சந்திப்பை நடத்துவற்காக ஏற்கனவே தீர்மானித்த 30ஆம் திகதியே முடிவெடுப்ப தென்று தமிழரசுக்கட்சியின் கிடுக்கிப்பிடியானது மாணவர்களின் அர்ப்பணிப்பையும், முயற்சியையும் கேளிவிக்குள்ளாக்கி உங்கள் பணிமுடிந்து விட்டது என்று சொல்லாமல் சொல்ல விளைந்துள்ளமையை காட்டுகின்றது.

அதேநேரம் 13அம்சக்கோரிக்கைகளை விடவும் தமிழரசுக்கட்சி தனியாக 18 அம்சக் கோரிக்கைகளை தாம் பிரதமிடத்தில் முன்வைத்து பேச்சுக்களை நடத்தவதாக மாவை.சேனாதிராஜா அதன்போது குறிப்பிட்டார். அவ்வாறாயின் 13அம்சக்கோரிக்கைகள், பொதுஇணக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்து என்பவற்றை எதற்காக செய்தீர்கள் என்று கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டபோது அவர் உரிய பதிலளித்திருக்கவில்லை. இந்த விடயத்தில் அரசியல் கட்சிகளை விடவும் பல்கலை மாணவர்களும், சிவில் தரப்பினரும் இறுக்கமாக நிலைப்பாடொன்றை எடுத்திருக்க வேண்டும். ஆகக்குறைந்தது தமிழரசுக்கட்சி முன்வைத்த 18அம்சக்கோரிக்கைளையும் வெளியிடுங்கள் என்றாவது கோரியிருக்க வேண்டும். ஆனால் எந்தவிதமான அழுத்தங்களும் பாரியளவில் பிரயோகிக்கப்படாது மீண்டும் 30ஆம் திகதி கூடி இறுதிமுடிவு எடுப்பதென ஈற்றில் இணங்கியமை துரதிஸ்டவசமானதாகும்.

அதனையடுத்து 30ஆம் திகதி மீண்டும் கூடிபோது, நாங்கள் சொன்ன விடயங்கள் எல்லாம் சஜித்தின் தேர்தல் விஞ் ஞாபனத்தில் வருகின்றது. அவ்வாறு வராது விட்டால் அதற்கு பின்னர் என்ன தீர்மானத்திற்குச் நீங்கள் சென்றாலும் நான் அதற்கு சம்மதிப்பேன் என்று சுமந்திரன் ஏகாதிபத்திய குரலில் கூறியதைக் கேட்டு சகலத்தையும் அடக்கிக்கொண்டு அனைத்து தரப்பினரும் இருந்துள்ளார்கள். அத்துடன் தபால் மூல வாக்களிப்பில் வாக்களர்களிடத்திலேயே தெரிவுக்கான சுயாதீன இடமளிப்பதாக கூறுவதென்றும் அனைத்து தரப்பினரும் இணங்கியுள்ளார்கள். ஆனால் அடுத்த கூட்டம் எப்போது என்று கூட திகதியிடப்படாத நிலையில் அங்கிருந்து அகன்று சென்றிருக்கிறார்கள். தற்போது சஜித் பிரேமதாஸவின் விஞ்ஞாபனத்தில் பழையகுருடி கதவை திறடி கதையாக, புதிய அரசியலமைப்பு, ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்தவின் அதிகாரப்பகிர்வு யோசனை திட்ட ஆராய்வு என்றெல்லாம் தேசியப்பிரச்சினை தீர்வு மற்றும் அதிகாரப்பரவலாக்கல் போன்ற விடயங்களை மையப்படுத்தி குறித்துரைக்கப்பட்டுள்ளன.

ஆனால் புதிய அரசியலமைப்பொன்று உருவானால்தான் ஏனைய விடயங்கள் நடைபெறுவதற்கான நிலைமைகள் இருக்கின்றன. இங்கு புதிய அரசியலமைப் பொன்று உருவாகுமா என்பது தான் முதல் வினாவாகின்றது.

இடைக்கால அறிக்கையையே எதிர்க்கும் தென்னிலங்கை சிங்கள தேசியவாதிகளை ஒருங்கிணைத்து சஜித்தோ, ரணிலோ மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறுவார்களா என்பதும் மிகப்பெரும் வினாவாகும். அதனடிப்படையில் புதிய அரசியலமைப்பை காட்டி கடந்த நான்கைந்து வருடங்களாக ஏமாற்றிய சம்பந்தனுக்கும் தமிழரசுக்கட்சிக்கும், வடக்கு கிழக்கு இணைப்பு, சமஸ்டி தீர்வு, சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேச அங்கீகாரம் என்ற தமிழ்த் தேசிய கோட்பாடுகள் எவையும் அற்ற நிலையில் மீண்டும் புதிய அரசியலமைப்பு விடயத்தினை முன்வைத்து சரணாகதி அரசியல் பயணத்தினை தொடர்வதற்கு ஏதுவான நிலைகளே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சி தவறு என்கிறபோது அதனை மறுதலித்து நியாயமாக செயற்பட வேண்டிய பாத்திரத்தினை ஏற்றிருக்க வேண்டிய ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழரசுக்கட்சி தனது பாதையில் நிமிர்ந்த நடையில் செல்வதற்கே வழிசமைத்திருக்கின்றன. ஆகவே மாற்றுசக்திகளாக உருவெடுக்க விளையும் தரப்புக்கள் தங்களின் பலவீனத்தினை அறிந்து தெளிந்து அடுத்த கட்டம் நோக்கி விரைந்து நகரவேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது என்று மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# தமிழர்கள் வாக்களிப்பதற்கு சுட்டிக் காட்டக்கூடிய நிலையில் எந்த வேட்பாளருமில்லை!

## தமிழ்மக்கள் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன்

எமது கட்சியினுள் எந்தவொரு வேட்பாளரையும் மையப்படுத்தி தீர்மானம் எடுக்கும் நிலைப்பாடுகள் இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் தமிழர்கள் இவருக்கு வாக்களியுங்கள் என்று எந்தவொரு வேட்பாளரையும் சுட்டிக்காட்டக்கூடிய நிலையில் இல்லை என்பதில் தீர்க்கமாக இருக்கின்றோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப்பேச்சாளரும், கொள்கை பரப்புச் செயலாளருமான அருந்தவபாலன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய பிரத்யேக நேர்காணலின்போது தெரிவித்தார். அதன் முழுவடிவம் வருமாறு...

**கேள்வி:- தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து பணியாற்றி வருகின்ற நிலையில் புதிய அரசியல் தளம் எவ்வாறிருக்கின்றது?**

பதில்:— தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியாக இருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பல செயற்பாடுகளில் தொடர்ச்சியாக அதிருப்தியடைந்து வந்தேன்.







இதன் காரணமாகவே அக்கட்சியிலிருந்து வெளியேறும் தீர்மானத்தினை எடுத்திருந்தேன். தமிழ் மக்கள் கூட்டணியில் தற்போது இணைந்து பணியாற்றி வருவது திருப்தியாக உள்ளது.

தமிழரசுக் கட்சியில் தனி நபர்களின் நிகழ்ச்சி நிரலுக்கே முக்கியத் துவம் அளிக்கப்பட்டு வந்ததோடு, அந்த தீர்மானத்தின் பின்னால் அனைவரையும் வலிந்து செயற் படுத்தும் நிலைமையொன்றே இருந்தது. இவ்வாறு பல விடயங்களை கூறிக்கொண்டே செல்லமுடியும். இந்நிலையில் தற்போது தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து பணியாற்ற ஆரம்பித்ததையடுத்து, சுதந்திரமாகவும், கொள்கை அடிப்படையிலும், கூட்டுத் தீர்மானத்தின் பிரகாரமும் செயலாற்றக்கூடிய சூழ்நிலைகள் இருப்பது மனநிறைவைத் தருகிறது.

மக்கள் நலனை மையப்படுத்திய ஆரோக்கியமான செயற்பாடுகளை நேர்மையாக முன்னெடுப்பதற்கான சூழல் தமிழ் மக்கள் கூட்டணியில் உள்ளது. ஆகவே தமிழ் மக்கள் கூட்டணியுடனான இணைந்த பயணம் எம்மைப்போன்றவர்களுக்கு உத்வேகத்தினை அளிப்பதாக உள்ளது.

**கேள்வி:- தென்மராட்சிக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்த நிலையில் அதனை நிரப்புவதற்காக கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சி உங்களுக்கும் வாக்குறுதி அளித்திருந்தல்லவா?**

பதில்:— தமிழரசுக்கட்சி பொதுத்தேர்தலில் தென்மராட்சி மக்களின் வாக்குகளை கணிசமாக பெற்றிருந்தது. தேர்தல் முடிவுகளின் பின்னர் தென்மராட்சிக்கான பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தேசியப்பட்டியல் பிரதி—நிதித்துவம் அளிக்கப்படும் என்றும் முன்கூட்டியே கூறினார்கள். காரணம், தென்மராட்சி மக்களின் எழுச்சியையும், கோபத்தையும், அடுத்த தேர்தல்களில் அவர்களின் வாக்குகளை மீண்டும் பெறுவதற்காகவுமே அவ்வாறு கூறப்பட்டதே தவிர அம்மக்கள் மீதான உண்மையான நலனை மையப்படுத்தியதாக இல்லை என்பது தற்போது உணரப்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தென்மராட்சிக்கான பிரதி நிதித் துவத்தினை வழங்குவதற்கு எள்ளளவும் விரும்பமில்லாதவராக இருக்கின்றார். இதனை பிரதேச மக்களையும் கடந்து வடக்குக் கிழக்கிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

**கேள்வி:- ஐந்து கட்சிகளும் 13 அம்சக் கோரிக்கைகளுடன் இணக்கப்பாட்டினை எட்டியிருந்தபோதும் சனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க முடியாது போனமைக்கு காரணம் என்ன?**

பதில்:— சனாதிபதி தேர்தலில் ஆறுகட்சிகள் இணைந்து இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கு முயற்சித்தபோதும் ஆரம்பத்திலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி விலகியிருந்தது. அதன் பின்னர் ஏனைய கட்சிகள் பொதுவான இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தன. இருப்பினும், தமிழரசுக் கட்சியானது முன்னுக்கு பின் மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியது. இதனால் தான் தீர்க்கமான தீர்மானமொன்றை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

குறிப்பாக, இறுதியாக நடைபெற்ற கூட்டங்களின்போது, தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா, தாங்கள் ஏற்கனவே எடுத்த தீர்மானத்தினை முன்னிலைப்படுத்தி பக்கம் சார்ந்த கருத்துக்களை வெளியிட்டமையோடு ஏனைய கட்சிகளையும் தமது தீர்மானத்திற்கு ஆதரவாக அரவணைக்க வேண்டும் அந்த முயற்சி கைகூடாத பட்சத்தில் ஏனைய கட்சிகள் எடுக்கும் தீர்மானங்களுக்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்ற வகையில்தான் அமைந்திருந்தன. அதேநேரம், மாவை.சேனாதிராஜா தான் கட்சியின் தலைவர் என்ற வகையில் முடிவெடுக்க முடியாதவராகவும் கூட்டத்தில் பங்கேற்காத வேறு நபர்களில் தங்கியிருந்து முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமைக்குள்ளும் இருந்தார் என்பது வெளிப்படையாக தெரிந்தது. இதனால் இறுதிவரையில்



முடிவுகளை எடுக்க முடியவில்லை. குறிப்பாக தபால் மூல வாக்களிப்பிற்கு முன்னர் கூட உரிய தீர்மானத்தினை அறிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இதனையடுத்தே, எமது கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்கினேஸ்வரன் எமது கட்சியின் நிலைப்பாட்டினை மக்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் ஊடக அறிவிப்பொன்றைச் செய்திருந்தார். இந்த அறிவிப்பானது ஈற்றில் ஐந்து கட்சிகளினதும் தபால் மூலமான வாக்களிப்பு குறித்த தீர்மானத்திற்கு வழியமைப்பதாக இருந்ததை நீங்கள் அறிவீர்கள்.

**கேள்வி:-அனைத்துக் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஐந்து கட்சிகளும் கூடி இறுதி தீர்மானத்தினை அறிவிப்பதாக கூறப்படுகின்றமையை எவ்வாறு பார்கின்றீர்கள்?**

பதில்:—தமிழ் மக்களின் அடிப்படை மற்றும் உடனடிக் கோரிக்கைகளை உள்ளடக்கிய 13 அம்சக் கோரிக்கைகளுக்கு நிகரான விடயங்கள் எந்தவொரு பிரதான சனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இடம்பெறப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் நாமும், ஈ.பி.ஆர்.எல்.எப்,ரெலோ ஆகிய கட்சிகளும் இருக்கின்றோம். ஆகவே எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு சுட்டமுடியாது என்ற அறிவிப்பினை வெளியிடுவதே சமயோசித மானது என்ற நிலைப்பாடும், கட்சிகளுக்கு இருந்தன. இருப்பினும் அந்த முடிவினை அறிவிப்பதற்கு தமிழரசுக்கட்சி விரும்பவில்லை. குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சுமந்திரன், 13 அம்சக்கோரிக்கைகளை உள்ளடக்கிய வகையில் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் நிச்சயமாக அமையும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். அவ்வாறான நிலையில்தான் தோதல் விஞ் ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர் மீண்டும் கூடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணப்படுகின்ற விடயங்களை ஆராய்ந்த பின்னர் தான் ஐந்து கட்சிகளின் நிலைப்பாடுகள் எவ்வாறு அமையும் என்று கூற முடியும்.

**கேள்வி:-தமிழர் அரசியல் வரலாற்றில் எழுத்துமூலமான ஒப்பந்தங்களே தென்னிலங்கை தலைவர்களால் கிழித்தெறியப்பட்டுள்ள நிலையில் தேர்தல் விஞ்ஞானபத்தினை மையப்படுத்தி எடுக்கப்படும் தீர்மானம் தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் என்று எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்க முடியும்?**

பதில்:— தந்தை செல்வா காலத்திலிருந்து எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டும், உடன்படிக்கைகள்

தொடர்ச்சி 09ம் பக்கம்..

# இழந்த வாய்ப்பும் தேவைப்படும் புதிய அணுகுமுறையும்

மு.திருநாவுக்கரசு

நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறையை கொண்ட அரசியல் அமைப்பை 1978 ஆம் ஆண்டு உருவாக்கியபோது துணை சனாதிபதி முறைமை என்ற ஒன்று அதில் திட்டமிட்டு தவிர்க்கப் பட்டிருந்தது. ஒரு துணை சனாதிபதி என்று ஒன்று இருந்தால் அது ஒரு தமிழனுக்கு அல்லது ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவருக்கென வகுத்தொதுக்கப்பட வேண்டும் என்பதால், பேரினவாத ஆதிக்க நோக்கிலிருந்து அது தவிர்க்கப்பட்டது.

துணை சனாதிபதி முறைமையற்ற அரசியல் அமைப்பை ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் உருவாக்கிய போது துணை சனாதிபதி முறைமை வேண்டும் என்ற கோரிக்கையை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் முன்வைக்கவில்லை.

தனது மனைவி சந்திரமதியை அரிச்சந்திரன் விற்பதற்கு விலை கூவியபோது " இது உலகம் அறியாத புதுமை ; கேளுமையா , விலை கேளுமையா" என்று கூவி விற்ற புதுமையைவிடவும் பெரிய உலகளாவிய புதுமை இலங்கை அரசியலமைப்பில் துணை சனாதிபதி முறைமை இல்லாது உருவாக்கப்பட்ட விடயமாகும்.

சிங்கள முற்போக்காளர்களோ, சிங்களப் புத்திஜீவிகளோ, சிங்கள ஊடகவியலாளர்களோ, சிங்கள மனித உரிமையாளர்களோ

மற்றும் ஏனைய மனித உரிமையாளர்களோ, தாராண்மை சனநாயகம் பற்றி பேசும் பொய்யான குட்டி சனநாயகவாதிகளோ மற்றும் சிங்கள பௌத்த மத தலைவர்களோ இந்த அசிங்கத்தை கண்டுகொள்ளத் தயாராக இல்லாத அளவிற்கு இலங்கையில் பேரினவாதம் ஒரு போதும் சமரசத்துக்கும் இடமின்றி பெரிதும் தலையெடுத்து உள்ளது என்பதே உண்மை.

எனவே துணை சனாதிபதி முறைமையற்ற ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கும் அரசியல் கலாச்சாரத்தைக் கொண்ட சிங்கள பௌத்த அரசியல் முறைமையின் கீழும் , அதன் கீழ்த் தோன்றிய சனாதிபதி முறைமையின் கீழும் , அதற்கான தேர்தல் மீதும் தமிழ் மக்கள் ஒரு போதும் நம்பிக்கை வைத்துச் செயல்பட முடியாது என்பதுதான் அரசியல் வரலாற்று உண்மை.

ஆனால் "அரசியல் என்பது காணப்படக்கூடிய வாய்ப்புக்களை கையாள்வது பற்றிய ஒரு வித்தை" என்ற வகையில் எதிரியால் சுழட்டி விடப்படும் சக்கரத்தை எமக்கு சாதகமாக உருட்டி விடக்கூடிய பக்கங்கள் உண்டாயின் அவற்றைப் பயன்படுத்த வேண்டியது சாதுரியம் மிக்க அரசியல் தலைமைகளின் பொறுப்பாகும்.

இந்தவகையில் தேர்தலின் போது எதிரிகளுக்கு இடையே ஏற்படும் போட்டிகளின் மத்தியில் எதிரிகளுக்கு இடையேயான முரண்பாட்டை பயன்படுத்தக்கூடிய தந்திரத்தின் பொருட்டு இத்தகைய சனாதிபதி தேர்தல்களை கையாள முடியும். அடுத்து தமிழ் மக்கள் தமக்கான ஆணையை உலகிற்கு பறைசாற்ற ஏற்றவகையில் இத்தகைய தேர்தல்களை பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். அதாவது எதிரியின் ஏற்பாட்டில், எதிரியின் செலவில், எதிரியால் தரப்படும் ஒரு வாய்ப்பாக இத்தேர்தலை கையிலெடுத்து அதன் மூலம் தமது சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தையும் நமது நிலைப்பாட்டையும் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் நிலைநாட்டக் கூடிய வகையில் இத்தேர்தலைப் பயன்படுத்த இயலும்.

இலங்கையில் நிகழும் சனாதிபதி தேர்தல் முறையில் ஒரு வாக்காளருக்கு மூன்று விருப்பத் தேர்வு வாக்குகள் இருக்கின்ற நிலையில் தமிழர் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதற்க்கேற்ற வாய்ப்புகளும் அதற்கான பரப்பளவும் மிகப் பெரிதாக உண்டு. இத்தேர்தல் முறையின் கீழ் தமிழ் மக்கள் தமது முதலாவது வாக்கை தமது தேசிய திடசித்தத்தை வெளிப்படுத்தவும் தமது நிலைப்பாட்டையும் தமது ஆணையையும் உள்நாட்டு— வெளிநாட்டு அரங்கில் வெளிப் படுத்தவும் ஏற்றவகையில் பயன்படுத்தலாம். இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தேர்வு வாக்குகளை தமக்கு இருக்கக்கூடிய பேரம் பேசும் சக்தியை கையாளக் கூடிய வகையில் பயன்படுத்தலாம்.




ஆனால் இத்தேர்தல் முறையில் காணப்படக்கூடிய இத்தகைய பன்முகப்பட்ட வாய்ப்புகளைப் பற்றி தமிழ் தரப்பு ஒருபோதும் சிந்திப்பதில்லை. தமது முதலாவது வாக்கை தமிழ் மக்கள் தமது தேசிய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய வகையில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு அளிப்பதானது கைமேல் உள்ள முதலாவது நல்ல வாய்ப்பாகும். அப்படி அனைவரும் ஒன்றுபட்டு அல்லது ஏறக்குறைய பலர் ஒன்றுபட்டு ஒரு பொது வேட்பாளரை நிறுத்தக்கூடிய ஓர் அரிய வாய்ப்பைத் தமிழ் தரப்பானது தவறவிட்டுவிட்டது.

"இருப்பதை வைத்துக்கொண்டே எதையும் செய்யலாம் ; அடுத்து காணப்படக்கூடிய உள்ளதற்குள் நல்லது எதுவோ அதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற அரசியல் கூற்றுக்கிணங்க ஏற்கனவே தன்னிச்சையாக ஒரு சனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள திரு.சிவாஜிலிங்கத்தை ஒரு பொது வேட்பாளராக நிலைப்படுத்த செய்வதற்கேற்ற மாற்று வழிகளைப் பின்பற்றலாம். ஆனால் அதற்கான அரசியல் முதிர்ச்சியையும் செழுமையான மனப்பாங்கையும் காட்ட வல்லதாக தமிழ் மக்கள் தரப்பிலான அரசியல் சூழல் காணப்படவில்லை.

அப்படியாயின் பகிஷ்கரிப்பு, ஒத்துழையாமை, சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் ,உண்ணாவிரதம், சாகும்வரை உண்ணாவிரதம் என்ற சனநாயக வழிமுறையிலான அடுத்தடுத்த கட்டத் தேர்வுகளே களத்தில் இருக்கமுடியும்.

மகாத்மா காந்தியின் சாத்வீக வழியிலான போராட்டமானது தென்னாபிரிக்காவில் முதலில் சட்டமறுப்பு போராட்டத்தை ஆரம்பித்ததோடு உதயமானது. அதாவது இன ஒதுக்கலின் குறியீடாக கறுப்பர்களுக்கும் ஆசியர்களுக்குமென வெள்ளையின ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட "பாஸ்" முறையினையும் அதற்கான சட்டங்களையும் சாத்வீக வழியிலான தனது போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மகாத்மா காந்தி ஆரம்பித்தார். இனத்துவேசத்தின் குறியீடான அந்தப் "பாஸை" தீயிட்டுக் கொளுத்தும் போராட்ட இயக்கத்தை காந்தி ஆரம்பித்தார். அவ்வாறு அந்தப் "பாஸை" தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தின் போது காவல் துறையால் அந்தச் சாத்வீகப் போராளிகள் தாக்கப்பட்ட நிலையில் இறுதியாக காந்தியின் மண்டை காவல்துறையால் அடித்து உடைக்கப்பட்ட நிலையிலுங்கூட காந்தி "பாஸை" தீயிட்டுக் கொளுத்தும் தன் போராட்டத்தில் இருந்து பின்வாங்காமல் அந்தப் "பாஸை" தீயிலிட்டுக் கொளுத்துவதில் வெற்றி பெற்றார். அடி உதைக்கும் சித்திர வதைக்கும் சிறைச்சாலைகளை தனது வீடாக ஏற்றுக் கொள்வதற்கும், உயிரைப் பணயம் வைப்பதற்கும், தனது உடல் — பொருள் —ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பதற்கும் அவர் தயாரானார். இத்தகைய போராட்டங்களை முன்னெடுப்பதற்கு அளப்பெரும் வீரமும் ஒப்பாரும் மிக்காருமற்ற அர்ப்பணிப்பும் தேவைப்பட்டது. இந்த வகையில் மரணத்திற்கான ஆயுதமற்ற படையின் முதலாவது போர் வீரனாய் காந்தி தன்னை ஆக்கிக் கொண்டார்.

உயிரை பணயம் வைத்து, சட்டமறுப்பு, ஒத்துழையாமை, பகிஷ்கரிப்பு சத்தியாக்கிரகம், சாகும்வரை உண்ணாவிரதம் போன்ற சாத்வீக படிமுறைகளில் போராட்டங்களை முன்னெடுக்கவல்ல தலைவர்களோ அமைப்புகளோ உள்ளனவா என்ற கேள்விகளுக்குத் தலைவர்கள்தான் பதிலளிக்க வேண்டும். அதற்கான அறிகுறிகள் நிச்சயம் தெரியவில்லை.

மக்கள் ஆதரவோடு ஆனால் தலைவர்கள் மேற்படி அர்ப்பணிப்புள்ள போராட்டத்தில் களம் இறங்குவார்களேயானால் அத்தகைய தலைவர்களை எதிரியால் இலகுவில்

தொடர்ச்சி 09ம் பக்கம்..

# சுர்ஜித்தும் ஈழமண்ணில் புதைந்த குழந்தைகளும்



**தீபச்செல்வன்**

ஒரு துயரம் இன்னொரு துயரத்தை நினைவுபடுத்தும். ஒரு போர் இன்னொரு போரை நினைவுபடுத்தும். மனிதத்திற்காக இரங்கும் மனச்சாட்சி உள்ளவர்களின் பார்வையில் ஒன்று துயராகவும் மற்றையது மகிழ்ச்சியாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் ஈழத்தில் துயரங்களின் அரசியலில் இதெல்லாம் சாத்தியம் ஆகிவிட்டது. தமிழகத்தின் திருச்சியை சேர்ந்த சுர்ஜித் என்ற இரண்டு வயதுக் குழந்தையின் மரணம், உலகத் தமிழர்களை மாத்திரமல்ல, மனச்சாட்சி உள்ள எல்லா மனிதர்களையும் பெரும் அந்தரிப்புக்கும் துயரத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. எத்தனையோ மரணங்கள் எல்லா இடமும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் சில மரணங்கள் மனித மனங்களை வெகுவாக தாக்கிச் செல்கின்றன. அப்படி ஒரு மரணம்தான் சுர்ஜித்தின் மரணமும். ஆழ்துளைக் கிணற்றில் வீழ்ந்த சிறுவன், எழுபது மணித்தியாலமாக அதற்குள் சிக்கியிருந்தான். பலருக்கு தூக்கம் இல்லை. மனம் அழுத்தத்தில் துடித்தது. சுர்ஜித்தை நினைத்தபடி தம் குழந்தைகளை அணைத்தவர்கள் பலர். அந்தக் குழந்தையின் குறும்புத்தனங்களையும் அப்பாவித் தனமான முகத்தையும் பார்த்து பலரும் கலங்கிக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாக தமிழகத்தில் நடக்கும் துயரங்கள் ஈழத்தைப் பாதிக்கக்கூடியது. ஈழத்தில் நடக்கும் துயரங்கள் தமிழகத்தைப் பாதிக்கக்கூடியவை. அந்த வகையில் ஈழத்தில் நடந்த ஒரு குழந்தையின் மரணம் தமிழகத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. அது பாலச்சந்திரனின் மரணம். பாலச்சந்திரன் இறுதிப் போரில் கொல்லப்பட்டு சில வருடங்களின் பின்னர் அது தொடர்பிலான சில புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. அதில் ஒரு புகைப்படத்தில் பாலச்சந்திரன் பிஸ்கட் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். வேறு ஒரு புகைப்படத்தில் நெஞ்சில் துப்பாக்கிகளால் சுட்டு துளையிடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிலையில் இருக்கிறான். பாலச்சந்திரனின் புகைப்படங்கள் உலகின் மனசாட்சியை உலுப்பின. ஐ.நா அவையில் கூட முக்கிய பேசு பொருளானது. ஐ.நா அறிக்கையில் அப் படுகொலை மிகப் பெரிய குற்றமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அப் புகைப்படங்கள் வெளியாகிய காலத்தில் தமிழகத்தில் இருந்தேன். அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம், பாலச்சந்திரன் படுகொலைக்கு கண்டனம் வெளியிட்டார். தமிழகத்தில் பாலச்சந்திரன் புகைப்படங்கள் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியிருந்தன.

ஒரு குழந்தையை பலியிட்டதன் பின்னரான புரட்சி என்றொரு கவிதையை அந்நாட்களில் எழுதினேன். பாலச்சந்திரனின் ஏக்கம் பிறளும் விழிகளுடன் அமைந்த புகைப்படத்தை தமது முகங்களில் பொருத்திக் கொண்டு தமிழகக் குழந்தைகள் நடாத்திய போராட்டத்தின் புகைப்படங்களும் பெரும் தாக்கத்தை தருவதாக இருந்தன. பதுங்கு குழியில் பிறந்த குழந்தை பதுங்குகுழியில் கொல்லப்பட, அக் குழந்தைக்காக குழந்தைகள் போராடும் ஒரு களமாக அப் போராட்டம் தென்பட்டது.

உண்மையில் குழந்தைகளின் மரணங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சுர்ஜித் உயிரோடு மீண்டுவிடுவான் என்ற ஏக்கத்துடன் எல்லோரையும் போலவே காத்திருந்தேன். நம்மில் பலரும் காத்திருந்தனர். அவனின் மரணம் பெருந்துயரை ஏற்படுத்தியது. முகப் புத்தகம் எங்கும் அஞ்சலி நிறைந்தது. அவனுக்கு பலரும் பேரஞ்சலி செலுத்தினர். மிகவும் உருக்கமான அந்த குறிப்புக்களிடையே சிங்கள நணபர் ஒருவர் சுர்ஜித்திற்கு அஞ்சலி செலுத்தியிருந்தார். தனது வீட்டில் சுர்ஜித்தின் புகைப்படம் ஒன்றை வைத்து குழந்தைகளை விளக்கேற்றி வணங்கச் செய்தார்.

அவர் பாலச்சந்திரனுக்கு விளக்கேற்றி அஞ்சலி செய்யவில்லை என்றபோதும், அவனுக்கு அஞ்சலி செலுத்துகின்ற மனம் கொண்டவர்தான். பாலச்சந்திரன் என்ற குழந்தையின் மரணம், பல சிங்கள சகோதரர்களுக்கு பெருந்துயரத்தை ஏற்படுத்தியது. மஞ்சுள வெடிவர்த்தன, பாலச்சந்திரன் குறித்து கவிதை எழுதினார். பாலச்சந்திரன் ஈழக் குழந்தைகளின் குறியீடு. ஈழக் குழந்தைகளின் மனசாட்சி. அவனை தலைவர் பிரபாகரனின் குழந்தையாக நினைத்து சிங்களப் படைகள் அழித்தன. ஆனால் அவன் ஈழக் குழந்தையாகவே வளர்ந்தான். தலைவர் பிரபாகரன் வளர்த்த செஞ்சோலை போன்ற இல்லக் குழந்தைகள் அவரின் குழந்தைகளாக வளர்ந்தன.

தென்னிலங்கையில் நாம் காணுகின்ற குழந்தைகள் எமக்கு மிகவும் பிரியத்தை ஏற்படுத்துகிறார்கள். குழந்தைகளுடன் யாரும் பகைமை கொள்ளுவதில்லை. ஆனால் ஈழத்தில் குழந்தைகள் இன அழிப்பில் இலக்கு வைக்கப்பட்டார்கள். பாலச்சந்திரன் எவ்வாறு அழிக்கப்பட்டானோ, அவ்வாறே பல ஈழக் குழந்தைகள் போரில் கொன்றழிக்கப்பட்டுள்ளார்கள். ஸ்முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தப் புகைப்படங்களில்கூட பலவற்றில் கொன்று வீசப்பட்ட குழந்தைகளைப் பார்த்திருக்கிறோம். உடற் பாகங்களை இழந்து இறந்து கிடந்தனர் குழந்தைகள். மண்மேடுகளிலும் பதுங்குகுழிகளிலும் கொல்லப்பட்டு புதைந்து கிடந்தனர். இறந்துபோன தாயின் மார்பில், தாய் இறந்ததை அறியாது பால் குடித்த குழந்தைகளும், தாய் தந்தையை இழந்து பெரும் காயப்பட்ட குழந்தைகளை சிறுவர்கள் ஏந்திக் கொண்டு ஓடிய நிகழ்வுகளும்கூட நடந்தன.

முள்ளிவாய்க்கால் போரே குழந்தைகளுக்கு எதிரானது. என் வகுப்பறையில் பெரும்பாலான பிள்ளைகளுக்கு இழுப்பு நோய் இருக்கின்றது. தடைசெய்யப்பட்ட குண்டுகளின் பாவனையால் சுவாசப் பாகங்கள்



அவர்களுக்கு பாதிக்கப்பட்டிருக்கலாம். நீரிழிவு, இரத்த அழுத்தம் என்று பல்வேறு நோய்கள் அவர்களுக்கு உள்ளன. அப்படிப் பார்க்கின்றபோது, இந்தப் போரே எம் குழந்தைகளுக்கு எதிராகவே நடந்தது. அதன் பாதிப்புக்களை அவர்கள் சுமக்கத் தொடங்கியுள்ளார்கள். முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போர் இன்னமும் அவர்கள்மீது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. ஆழ்துளைக் கிணற்றில் கைகளைமேலே நிமிர்த்தியபடியிருக்கும் சுர்ஜித்தின் காட்சி, பதுங்கு குழியொன்றில் இறந்து கிடக்கும் குழந்தையை ஈழத்தவர்களுக்கு நினைவுபடுத்துகின்றது. குழந்தைகளின் பாதுகாப்பு முக்கியமானது. அவர்களை சுற்றியிருக்கும் எல்லா அபாயக் குழிகளும் மூடப்பட வேண்டும்.

குழந்தையின் உயிர் பறிக்கும் ஆழ்துளைக் கிணறுகளும் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் பதுங்குழிகளும் இல்லாத தேசம் அவர்களுக்கு வேண்டும். வெடி குண்டு மழைகளை கடந்தவர்களும் மரணப் பதுங்கு குழிகளை கடந்து வந்தவர்களுமான என் மாணவர்கள், சுர்ஜித் பற்றியே பேசி மனம் கலங்கியபடி இருந்தார்கள். அந்த வார்த்தைகள் எண்ணற்ற சேதியை சொல்லின. இன அழிப்புப் போர் என்ற ஆழ்துளைக் கிணறுகளில் வீழ்ந்த எங்கள் குழந்தைகளின் மனங்களின் அஞ்சலி, சுர்ஜித்தை உயிர்ப்பிக்கும்.

6ம் பக்கத் தொடர்ச்சி... தமிழர்கள்

கொல்லமுடியாது. கூடியபட்சம் அவர்கள் சிறைச்சாலைகளைத்தான் நிரப்ப வேண்டிவரும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின்னணியில் தமிழ் மக்களின் பிரச்சினை உலகப் பிரபலம் அடைந்து இருக்கும் நிலையில், இதற்கான சர்வதேசச் சூழல் தமிழ்மக்களுக்கு சாதகமாக உள்ளது. ஈழமண்ணில் சாத்வீகப் போராட்டத்தை காந்தி வழியில் பெரிதும் முன்னெடுத்த தந்தை செல்வா 1962 ஆம் ஆண்டு அவர் முன்னெடுத்த சத்தியாகிரகப் போராட்டம் தோல்வி அடைந்ததோடு தன் சத்தியாகிரகம் மற்றும் பரந்த அளவிலான சாத்வீகப் போராட்ட முறைகளை எல்லாம் அவர் ஏறக்குறைய அத்தோடு கைவிட்டுவிட்டார்.

முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த திரு. பண்டிருட்டு இராமச்சந்திரன் அவர்களை 2016ஆம் ஆண்டு சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் கவிஞர் காசி ஆனந்தன், திரு. பரமமூர்த்தி என்பவர்களுடன் நானும் இணைந்து சந்தித்தோம். நாம் பேச எடுத்துக் கொண்ட விடயங்களை கவிஞர் காசியானந்தன் தொடர்ந்து முன்னெடுத்தார். அந்த உரையாடலின் போது ஒரு கட்டத்தில் தந்தை செல்வாவிற்கும் பெரியார் ஈவேரா அவர்களுக்கும் இடையே 1972 ஆம் ஆண்டு நிகழ்ந்த சந்திப்பு பற்றி திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேசலானார்.

தந்தை செல்வா, திரு.அ.அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகிய மூவரும் பெரியாரை சந்தித்தது பற்றி அவர் குறிப்பிட்டு பேசினார். தந்தை செல்வா தமது சாத்வீகப் போராட்டத்தை பற்றி விவரித்துக் கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் பெரியார் அவரிடம் பின்வருமாறு கேள்வி எழுப்பினார் என்று திரு. இராமச்சந்திரன் கூறினார்.

"இதுவரை காலமும் நீங்கள் முன்னெடுத்த சாத்வீகப் போராட்டத்தில் இதுவரை எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள்?" என்பதே அந்த வினாவாக அமைந்தது. தந்தை செல்வாவிடம் பதில் இருக்கவில்லை. சாகத் தயாரில்லாத அளவிற்கான சாத்வீகப் போராட்டத்தையே நீங்கள் முன் எடுத்தீர்கள் என்ற உண்மையை, தந்தை செல்வாவிற்குப் புகட்டும் வகையிலேயே பெரியாரின் அந்தக் கேள்வி அமைந்திருந்ததெனத் தெரிகிறது.

தந்தை செல்வாவின் புதல்வர்களாகவும் வாரிசுகளாகவும் விளங்கும் இன்றைய தமிழ் தலைவர்கள் தந்தை செல்வா 1962ம் ஆண்டு சாத்வீகப் போராட்டத்தை கைவிட்ட இடத்திலிருந்து இன்று தமது போராட்டத்தை ஆரம்பிப்பார்களா என்ற கேள்வி இங்கு இமயமலையென எழுந்திருக்கின்றது. இந்தக் கேள்வி நேரடியாக தந்தை செல்வாவின் பிரகடனப்படுத்தப்பட்ட வாரிசுகளுக்கு மட்டும் பொருதுவதாக அமையாது ஜனநாயக வழி மற்றும் சாத்வீகப் போராட்டங்களை பிரகடனப்படுத்தும் அனைத்து தமிழ்த் தலைவர்களுக்கும் பொருந்தும். ஒரு பொது வேட்பாளரை முன்நிறுத்தத் தயாரில்லாத நிலையில், தலைவர்கள் எனப்படுவோர் போராட்டத்தின் அடுத்த கட்டமாக எதிரிக்கு எதிராக ஒரு குண்டூசியைத்தானும் பயன்படுத்தாது நேரடி சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒரு முக்கிய வரலாற்றுக் கட்டம் எழுந்துள்ளது. இன்றைய தேர்தற் காலகட்ட சூழலில் தமிழ் தலைவர்கள், மக்களை இருத்தாது, ஆனால் மக்கள் ஆதரவுடன் தலைவர்கள் தம்மை முன்நிறுத்தி கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா எனப் பல தலைநகரங்களிலும் தாம் களம் இறங்குவார்களேயானால் அது தமிழ் மக்களின் போராட்டத்திற்கு உள்நாட்டு— வெளிநாட்டு — சர்வதேச ரீதியான புதிய பரிமாணங்களை அளிக்கும்.

# திருகோணமலை கடற்படைத் தளத்தை ஆய்வுசெய்ய நீதிமன்றம் அனுமதி

கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரும், கடைசியாக தடுத்து வைக்கப்பட்டிருந்த திருகோணமலை கடற்படைத் தளத்தில் விசாரணைகளை நடத்துவதற்கு, குற்ற புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. 2008—2009 காலப்பகுதியில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேர் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின்போது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த அனுமதியை வழங்கியது.



11 பேரும், காணாமல் ஆக்கப்படுவதற்கு முன்னர், தடுத்து வைக்கப்பட்டிருந்த திருகோணமலை கடற்படை முகாமில், சட்ட மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார ஆய்வாளர்கள், குற்ற விசாரணை அதிகாரிகள் என மூன்று குழுக்களை ஆய்வு நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. வரும் 10ஆம் நாளுக்குள் இந்த ஆய்வை நடத்தி, இந்தக் குழுக்கள் குற்ற விசாரணைப் பிரிவிடம் அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

7ம் பக்கத் தொடர்ச்சி... இழந்த வாய்ப்பும்

குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டும் தான் வந்திருக்கின்றமை தமிழர் அரசியல் வரலாறு. அவ்வாறிருக்கையில் எதிர்காலத்திலும் தென்னிலங்கை தலைவர்களுடன் செய்துகொள்கின்ற ஒப்பந்தங்களுக்கு என்ன நடக்கும் என்பதிலும் கேள்விகள் காணப்படுகின்றன. அதனைவிடவும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் வெளியிடப்படுகின்ற விடயங்கள் நடைமுறைக்கு வரும் என்று நம்புவதற்கில்லை. மேலும், தமிழர்களின் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வு நோக்கிய விடயத்தினை கையாளுகின்றபோது இலங்கைத்தீவினுள் இவ்வாறான சனநாயக முறையிலான விடயங்களையும் விரும்பியோ, விரும்பாமலோ கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தென்னிலங்கை தலைவர்களின் மனநிலைகளை நாம் அறிந்துள்ளபோதும் ஏற்படுகின்ற இக்கட்டான சூழல்களில் எமது கோரிக்கைகளை முன்னிறுத்தி முயற்சிகளை மேற்கொள்வதில் தவறில்லை.

**கேள்வி:- தமிழ் மக்களின் கோரிக்கைகளை கோத்தபாய நிராகரித்துவிட்ட நிலையில், சஜித் பிரேமதாஸவைச் சார்ந்து தமிழ் தரப்பினர் எடுக்கும் தீர்மானம் எவ்வளவு தூரம் சாதகமான நிலைமையை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்று கருதுகின்றீர்கள்?**

பதில்:— பிரதான வேட்பாளர்களைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையில் வாக்குகளைப் பெறுவதற்காக தாமே இனவாதத்தினை உருவாக்கி அதன் கைதிகளாக உள்ளார்கள். அத்துடன் அவர்கள் மகாவம்ச மனநிலையில் இருந்து வெளியில் வரமுடியாதவர்களாக உள்ளார்கள். அவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை கூட கருத்திற்கொண்டு பார்க்கின்ற நிலையில் அவர்கள் இல்லை என்பது தெளிவாக தெரிகின்றது. மக்கள் விடுதலை முன்னணி முற்போக்கான சிந்தனையாளர்களாக இருந்தாலும் அவர்களிடத்திலும் தென்னிலங்கையை மையப்படுத்தி சிங்கள தேசியவாதம் வேரூன்றி உள்ளது. ஏறக்குறைய அவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே உள்ளார்கள். இவ்வாறிருக்க சஜித் பிரேமதாஸவை சார்ந்து முடிவெடுப்பது என்ற விடயத்தில் சீர்தூக்கி பார்க்கின்றபோது, எமது கட்சியினுள் எந்தவொரு வேட்பாளரையும் மையப்படுத்தி தீர்மானம் எடுக்கும் நிலைப்பாடுகள் இல்லை. எம்மைப் பொறுத்தவரையில் தமிழர்கள் இவருக்கு வாக்களியுங்கள் என்று எந்தவொரு வேட்பாளரையும் சுட்டிக்காட்டக்கூடிய நிலையில் இல்லை என்பதில் தீர்க்கமாக இருக்கின்றோம். சில தரப்புக்கள் அவர் சார்ந்து முடிவுகளை அறிவிக்கலாம். ஆனால் அது தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவாக அமையப் போவதில்லை.

**கேள்வி:-சஜித் பிரேமதாஸ வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் பிரதமர் ரணிலை மையப்படுத்தி பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு முனைகின்றமை ஏன்?**

பதில்:— சஜித்பிரேமதாஸ தமிழ்த் தரப்பினை பகிரங்கமாக சந்திப்பதற்கு தயங்குகின்றார்கள். மேலும் ரணிலுடன் சில தமிழ்த் தரப்பினருக்கு காணப்படும் நெருக்கமான உறவுகளை பயன்படுத்தி அவர் ஊடாக முயற்சிகள் எடுக்கப்படுகின்றது. அதேபோன்று சஜித் பிரேமதாஸவும் ரணில் ஊடாக தமிழர் தரப்புக்கான காய்களை நகர்த்துவதாகவே அறிய முடிகின்றது. பொதுவாகவே ரணில், காய் நகர்த்துவதில் நரித் தந்திரங்களை கொண்டவர் என்ற மனநிலை அனைவரிடத்திலும் உள்ளது.

அத்துடன் அவருடைய அரசியல் இருப்பு எவ்வாறு எதிர்காலத்தில் அமையவுள்ளது என்பதும் கேள்விக்குறியாகின்றது. இந்நிலையில் அவர் வழங்குகின்ற வாக்குறுதிகள் அதுசார்ந்து எடுக்கப்படுகின்ற முடிவுகள் எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது கேள்விக்குறியான விடயமொன்றே.

**கேள்வி:- ஐந்து கட்சிகளை ஒரு கூட்டாக கொண்டுவருவதற்கு இந்தியா பின்னணியில் இருப்பதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார். அதுமட்டுமன்றி உங்களுடைய கட்சி பிறிதொரு கூட்டை அமைப்பதற்கான முஸ்தீபுகளைச் செய்கின்றபோதும் அதன் பின்னணியிலும் இந்தியா இருப்பதாக கூறுகின்றாரே?**

பதில்:—முதலாவதாக, கஜேந்திரகுமார் கூறுவது போன்று இந்தியாவின் கைப் பொம்மையாக எமது கட்சி இருக்கவில்லை. அத்துடன் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் எமது கட்சி இயங்கவில்லை. எமக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள அரசியல் உறவு கட்சியென்ற வகையில் மட்டுமே உள்ளது. மேலும் ஏனைய கட்சிகள் அனைத்தும் இந்தியாவின் கைப்பொம்மைகள் என்று கூறி தன்னை வேறுபடுத்திக் காண்பிப்பதற்கு முனைகின்றார். அடுத்து, ஐந்து கட்சிகளும் 13 அம்சங்களில் பொது இணக்கப்பாட்டினை எட்டி, கையொப்பமிட்டன. இந்த 13அம்சங்களையும் கஜேந்திரகுமாரும் ஏற்றிருந்தார். 13 அம்சங்களுக்கான ஆராய்விலும் இறுதி செய்வதிலும் அவரும் நேரடியாக பங்கேற்றிருக்கின்றார். இடைக்கால அறிக்கை என்ற விடயத்தால்தான் அவர் கையொப்பமிடும் சந்தர்ப்பம் ஏற்படாது போனது. ஆகவே 13அம்சக் கோரிக்கைகளும் இந்தியாவினுடையவை என்றும் இந்தியாவை திருப்திபடுத்துவதற்காக தயாரிக்கப்பட்டவை என்றும் அவரால் எந்த அடிப்படையில் கூறமுடியும் என்ற கேள்வியும் இங்கு உள்ளது.

# சந்திரிகாவின் மீள்வருகை கள நிலையை மாற்றுமா?

பூமிகன்

சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில் தேர்தல் களம் கடுமையாகச் சூடு பிடித்திருக்கிறது. அரசியலில் புதிய சர்ச்சைகளும் வாதப் பிரதிவாதங்களும் தீவிரமாகியிருக்கின்றது. இரண்டு பிரதான வேட்பாளர்களும் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளார்கள். குழப்பத்திலிருந்த தமிழ்க் கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை அறிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பின்னணியில், சஜித் பிரேமதாச வெற்றி பெற்றாலும் தானே தொடர்ந்தும் பிரதமராக இருப்பேன் என ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிவிப்பு, முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அதிரடியான நாடு திரும்பி, சஜித்துக்கு ஆதரவைத் தெரிவித்திருப்பதுடன், சுதந்திரக் கட்சியைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சி என்பன இந்த வார தென்னிலங்கை அரசியலின் தலைப்புச் செய்திகள்.

புதன்கிழமை அலரி மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதிரடியான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். “சஜித் சனாதிபதியானால், பிரதமர் பதவியில் நான் தொடர்ந்தும் இருப்பேன்” என்பதுதான் அவரின் அந்த அறிவிப்பு. அரசாங்கத்தின் கடந்த நான்கரை வருடகால அபிவிருத்திகள் தொடர்பிலேயே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. கடந்த கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும் என்பதைக் குறிப்பிட்டபோதே, “சஜித் சனாதிபதியானால் நானே பிரதமர்” என்ற அறிவிப்பை ரணில் வெளியிட்டார்.

இந்த அறிவிப்பு சர்ச்சையை உருவாக்கியதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஐ.தே.க.வின் சனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்த சர்ச்சை இடம்பெற்றுக்கொண்டிருந்த போது, சஜித்துக்கு விட்டுக் கொடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, ரணில் தரப்பு ஒரு நிபந்தனையாக இதனை முன்வைத்தது. அதாவது, பிரதமராக ரணில் தொடவேண்டும் என்பது அந்த நிபந்தனை. ஆனால், இதனை ஏற்றுக்கொள்வதற்கு சஜித் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். எந்த நிபந்தனையையும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் அறிவித்தார்.

இறுதியில் நிபந்தனைகள் இன்றியே சஜித் சனாதிபதி வேட்பாளர் ஆனார். மங்கள சமரவீரவை பிரதமராக நியமிக்கும் ஐடியாவுடனேயே சஜித் செயற்படுவதாகவும் ஒரு தகவல் வெளியாகியிருந்தது. சஜித்தை சனாதிபதி வேட்பாளராக்க வேண்டும் என்பதில் கடுமையாக உழைத்தவர்களில் மங்கள முக்கியமானவர். அதற்காக அவர் ரணிலுடனும் முரண்பட்டார். பிரதமர் பதவியில் கண் வைத்துக்கொண்டே இந்த நகர்வை அவர் முன்னெடுத்தாகவும் ஒரு தகவல் உள்ளது.

இது தொடர்பில் வெவ்வேறு விதமான கதைகள் உலாவ விடப்பட்டிருப்பதன் பின்னணியிலேயே ரணிலின் அறிவிப்பு இப்போது வெளியாகியிருக்கின்றது. இந்த வார ஆரம்பத்தில் நடைபெற்ற இரகசியக் கூட்டம் ஒன்றில் சம்பிக்க ரணவக்கவைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை சஜித்திடம் முன்வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஜாதிக ஹெல உறுமயவின தலைவரான அவரை பிரதமராக நியமிப்பதன் மூலம், பொதுத் தேர்தலில் ராஜபக்சக்களுடன் போட்டியிட்டு அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றக் கூடியதாக இருக்கும் என்பது இவர்களுடைய கருத்து. இனவாதிகளின் வாக்குகளைக் கவரக்கூடிய ஒருவர் அவர் என்பதே இதற்குக் காரணம்.

அதனைவிட மலையகத்தில் சஜித்துக்கு ஆதரவாக இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய நவீன் திசாநாயக்க மற்றொரு தகவலை வெளியிட்டார். சஜித் வெற்றி



பெற்றால், மலையகத்தைச் சார்ந்த ஒருவரே பிரதமராக நியமிக்கப்படுவார் என்பதே அவர் வெளியிட்ட கருத்து. 1994 இல் ஐ.தே.க.வின்சனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டு, குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்கவின் மகன்தான் நவீன். சபாநாயகர் கரு ஜயசூரியவின் மகளைத் திருமணம் செய்தவர். சஜித்துக்கு ஆதரவளிக்கும் நவீன், பிரதமர் பதவியில் கண்வைத்துச் செயற்படுகின்றார் என்பதும் தெரிகின்றது.

இந்த இரு தகவல்களும் வெளிவந்திருக்கும் பின்னணியில்தான் திடுதிடுப்பென விழித்துக் கொண்ட ரணில், “சஜித் சனாதிபதியானாலும் பிரதமர் பதவியில் நான் தொடர்வேன்” என அறிவித்தார். "எமது ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் சஜித் சனாதிபதியான பின்னரும் தடங்கலின்றித் தொடரும். அதனை நான் முன்னெடுப்பேன். சஜித் சனாதிபதியானாலும் பிரதமராக நானே தொடர்ந்திருப்பேன்” என்பதுதான் அவர் வெளியிட்ட அறிவிப்பு.

சஜித் பிரேமதாச இதற்கு நேரடியாகப் பதிலளிக்காவிட்டாலும், மறைமுகமாகப் பதிலளித்திருக்கின்றார். ஐ.தே.க.வுக்குள் புகைந்துகொண்டிருக்கும் முண்பாடுகளை இது வெளிப்படுத்தியிருக்கின்றது. புதன்கிழமை மாலை குருநாகலில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய சஜித் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

“சனாதிபதியாகிய பின்னர் நான் அமைக்கப்போகும் அமைச்சரவையில், ஊழல் பேர்வழிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை. சரத் பொன்சேகாவை பாதுகாப்பு அமைச்சராக நியமிப்பேன் என்பதை மட்டுமே நான் இதுவரையில் உறுதியாகக் கூறியிருக்கின்றேன். அதனைவிட எனது அமைச்சரவையில் வேறு யார் யார் இடம்பெறுவார்கள் என்பது குறித்து எந்த முடிவையும் நான் இதுவரையில் எடுக்கவில்லை” என்பதுதான் சஜித்தின் உரையின் சாராம்சம். மற்றொரு கூட்டத்தில் உரையாற்றியபோது, "பிரதமராக யாரை நியமிப்பது என்பதை நான் இன்னும் தீர்மானிக்கவில்லை" என அவர் கூறினார்.

வெளிப்படையாக இல்லாவிட்டாலும், ரணிலுக்குக் கொடுக்கப்பட்ட பதிலாகவே இவை உள்ளன. சஜித் சனாதிபதியாகத் தெரிவானாலும், தோல்வியடைந்தாலும் கட்சிக்குள் பூகம்பம் ஒன்று காத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத்தான் இந்த சிறிய வெடிப்புக்கள் உணர்த்துகின்றன. ஒரே மேடையில் இருவரும் ஏறினாலும், கட்சிக்குள் தொடரும் முரண்பாடுகள் தேர்தலில் கோத்தாபாயவுக்கு சாதகமாக அமைந்துவிடலாம் என்பதே ஐ.தே.க.விலுள்ள நடுநிலையாளர்களின் கருத்து. அதேவேளையில், அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி, பிரதமரை தெரிவு செய்வதற்கான அதிகாரம் சனாதிபதிக்கு இல்லை. பாராளுமன்றத்தில் அதிக ஆதரவைக் கொண்டுள்ளவரே பிரதமராக முடியும். மைத்திரி செய்த அரசியலமைப்புப் புரட்சியின் போது ரணிலை மீண்டும் பிரமராக நியமிக்க மறுத்தார். ஆனால், அதனைத் தொடர அவரால் முடியவில்லை. பாராளுமன்றப் பெரும்பான்மைக்கு அடிபணிந்தார். ஆக, சஜித் சனாதிபதியானால், ரணிலுடனான மோதல் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

புலனாய்வுத் தகவல்களின்படி கோத்தபாயவுக்கான ஆதரவே இப்போது அதிகமாகவுள்ளது. சந்திரிகாவின் வருகை இந்த நிலையை மாற்றுமா? என்பது இப்போது எழும் முக்கிய கேள்வி. சுமார் 10 இலட்சம் வாக்குகள் அவரிடம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திங்கள் இரவு சந்திரிகா நாடு திரும்பியுள்ளமையை அடுத்து கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கோத்தாபயவுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ள குமார வெல்கம போன்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளை நடத்தியுள்ளார். கட்சியின் தலைமைப் பதவியை மீளக் கைப்பற்றும் உபாயத்துடனேயே அவர் செயற்படுகிறார்.

சுதந்திரக் கட்சி ராஜபக்சக்களுடன் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ள போதிலும், அதில் பலர் அதிருப்தியடைந்துள்ளார்கள். குறிப்பாக வரப்போகும் பொதுத் தேர்தலையும் இலக்காகக் கொண்டதாகவே இந்த நகர்வுகள் உள்ளன. அதில் தமக்கு ஆசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே பெரும்பாலானவர்கள் பொதுஜன பெரமுனையில் இணைய முன்வந்தார்கள்.

ஆனால், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் ஆசனங்களை சுதந்திரக் கட்சியினருக்கு வழங்குவது என்பதுதான் ராஜபக்சக்களின் நிலைப்பாடு. கடந்த தேர்தலில் 8 வீதமான வாக்குகளைப் பெற்ற சுதந்திரக் கட்சிக்கு இது கடும் அதிர்ச்சி.

அவர்களில் சிலர் சந்திரிகாவுடன் இணைந்து சஜித்துக்கு ஆதரவளிக்க முன்வருகின்றார்கள். இது குறித்த பேரம்பேசல்கள் இப்போது இடம்பெறுகின்றது. இந்த நிலையில் உடைந்து சந்திரிகாவுடன் வரக் கூடிய சுதந்திரக் கட்சியின் வாக்குகள் சஜித்தைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாக இருக்குமா?

# கீழடி புராதன பொருட்களைக் காட்சிப்படுத்த அருங்காட்சியகம்

தமிழகத்தில் உள்ள கீழடியில் கிடைக்கப்பெற்ற தமிழர்களின் புராதன பொருள்களை காட்சிப்படுத்த, சிவகங்கை மாவட்டம் திருபுவனம் வட்டத்திலுள்ள கொந்தகையில் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் உலக தரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.



1956ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் தேதி மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இதை கொண்டாடும் வகையில், சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு தினம் இன்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, உலகில் முதல் மனிதன் தோன்றியது தமிழ் பேசும் மண்ணில்தான் என மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் கூறியுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்..தமிழகத்தில் உள்ள கீழடியில் கிடைக்கப்பெற்ற தமிழர்களின் புராதன பொருள்களை காட்சிப்படுத்த, சிவகங்கை மாவட்டம் திருபுவனம் வட்டத்திலுள்ள கொந்தகையில் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் உலக தரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும். இதேபோல் கலைவாணர் அரங்கிலும், பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் கலைஞர் 60 பேருக்கு நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியையொட்டி, ஓவியக் கண்காட்சி, சிற்ப கண்காட்சி ஆகியவையும் நடைபெற்றன. இதை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேரில் பார்வையிட்டார்.

# தாய்லாந்து மொழியில் திருக்குறள் நூலை வெளியிட்டார் இந்தியப் பிரதமர்



தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இந்தியா—ஆசியான் உச்சி மாநாடு இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது. இதைப்போல கிழக்கு ஆசிய உச்சி மாநாடு மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகள் உள்ளிட்ட 16 நாடுகளுக்கு இடையேயான பிராந்திய விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையும் நாளை (திங்கட்கிழமை) நடைபெறுகிறது.

இந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி 3 நாள் பயணமாக நேற்று பாங்காக் போய் சேர்ந்தார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் ஏராளமான இந்தியர்களும் கலந்து கொண்டு பிரதமரை அன்போடு வரவேற்றனர்.

இதைத்தொடர்ந்து பாங்காக் தேசிய உள்விளையாட்டு அரங்கில் குழுமியிருந்த இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட விவகாரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பேசினார். இதனையடுத்து இந்த நிகழ்ச்சியின்போது தாய்லாந்து (தாய்) மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை பிரதமர் மோடி வெளியிட்டார். மேலும் குருநானக்கின் 550—வது பிறந்தநாள் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

இந்நிலையில், இந்தியர்கள் மத்தியில் ஆற்றிய உரையை பிரதமர் மோடி தமிழில் 'வணக்கம்' கூறி தொடங்கினார். அப்போது அங்கு உரையாற்றிய மோடி 'தமிழ் மொழியின் மிகச் சிறந்த நூலான திருக்குறளின் மொழி பெயர்ப்பு தாய்லாந்து மக்கள் வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்துவதற்கு வழிகாட்டியாக அமையும்' என்றார்.

மேலும் இல்லறவியலில் 212 —வது அதிகார பாடலான 'தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு'என்ற குறளையும் வாசித்து அதற்கான அர்த்தத்தையும் கூறினார். அதாவது ஒவ்வொருவரும் இடைவிடாமல் முயற்சி செய்து தங்கள் திறமைக்கு ஏற்ப பொருளீட்ட வேண்டும். அவ்வாறு ஈட்டிய பொருளெல்லாம் தகுதி படைத்த மக்களுக்கு அதாவது உழைக்க முடியாமல் இருப்பவர்களுக்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

இந்தியர்களின் வாழ்க்கை முறை இவ்வாறு தான் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார். உலக தலைவர்கள் ஒன்று கூடிய ஐ.நா சபையில் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கனியன் பூங்குன்றனாரின் பாடலை மேற்கோள் காட்டியதோடு உலகிலேயே தொன்மையான மொழி தமிழ் என்று உலக நாடுகள் மத்தியில் பிரகடனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக பிரதமர் மோடி டுவிட்டர் பதிவில், தாய்லாந்து மொழியில் திருக்குறள் நூலை வெளியிட்டேன் என பதிவிட்டுள்ளார்.

# இந்திய வரைபடத்தில்

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்




இந்தி அரசு வெளியிட்டுள்ள புதிய இந்தியா வரைப்படத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் ஜம்மு—காஷ்மீர் யூனியன் பிரதேசத்துடனும் கில்கிட்—பல்டிஸ்தான் லடாக்குடனும் இணைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள புதிய இந்தியா வரைப்படத்தில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் ஜம்மு—காஷ்மீர் யூனியன் பிரதேசத்துடனும் கில்கிட்—பல்டிஸ்தான் லடாக்குடனும் இணைக்கப்பட்டுள்ளது. 1947—ம் ஆண்டில் ஜம்மு—காஷ்மீரில் கதுவா, ஜம்மு, உதம்பூர், ரேசாய், அனந்த்நாக், பாரமுல்லா, பூஞ்ச், மிர்பூர், முசாபர்பாத், லே மற்றும் லடாக், கில்கிட், கில்கிட் வசாரத், சில்ஹாஸ் மற்றும் பழங்குடியினர் பகுதி என மொத்தம் 14 மாவட்டங்கள் இருந்தன.

ஜம்மு—காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியலமைப்பு சட்டத்தின் 370—வது பிரிவை மத்திய அரசு கடந்த ஆகஸ்ட் மாதம் நீக்கியது. மேலும், மாநில அந்தஸ்தும் பறிக்கப்பட்டு ஜம்மு—காஷ்மீர் மற்றும் லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டன.

# காஷ்மீர் விவகாரம் ஐ.நா.வில் விவாதிக்கப்பட மாட்டாது

## பாதுகாப்புச் சபை அறிவிப்பு




ஐ.நா. பாதுகாப்பு சபையின் மாதாந்த கூட்டத்தில் ஜம்முகாஷ்மீர் விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்பட மாட்டாது என ஐ.நா.வுக்கான பிரிட்டன் தூதரும், பாதுகாப்பு சபையின் தற்போதைய தலைவருமான கரேன் பியர்ஸ் தெரிவித்துள்ளார். நவம்பர் மாதத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டபின், நியூயோர்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஐ.நா. பாதுகாப்புசபைக் கூட்டத்தில் ஜம்மு காஷ்மீர் பற்றி விவாதம் ஏதும் நடைபெறாது என்றார்.

காஷ்மீர் விவகாரத்தை ஏற்கனவே விவாதித்துவிட்டதாகவும், அதுதொடர்பாக விவாதிக்க வேண்டும் என எந்த நாடும் கோரிக்கை விடுக்கவில்லை என்றும் பியாஸ் தெரிவித்தார். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தின்போது, பாகிஸ்தான் மற்றும் சீனா முறையிட்டதை அடுத்து, பாதுகாப்பு கவுன்சிலின் 15 உறுப்பு நாடுகளும் விவாதித்தன.

காஷ்மீர் விவகாரம் இந்தியா— பாகிஸ்தான் இடையிலான பிரச்சனை என பெரும்பாலான நாடுகள் கருத்து தெரிவித்ததை அடுத்து இது தொடர்பாக எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

# பாக்தாதி கொலையை நேரடியாக ரசித்த ட்ரம்ப்





**குமரேசன்**

தன் கதை ஒரே இரவில் இப்படி முடியும் என, தீவிரவாதி பாக்தாதி கனவிலும் நினைத்திருக்க மாட்டார். 'பாக்தாதி கொல்லப்பட்டுவிட்டார்' என்ற செய்தி இதற்கு முன்னரும் பலமுறை வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அப்போதெல்லாம் சிரியாவுக்குள் ஏதோ ஒரு பகுதியில் பாக்தாதி கடுமையாக உரையாற்றிக் கொண்டிருப்பார். ஆனால், இந்த முறை பாக்தாதியின் கதையை அமெரிக்கா திட்டமிட்டு கனகச்சிதமாக முடித்திருக்கிறது.

கடந்த 2014—ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஐ.எஸ் (இஸ்லாமிக் ஸ்டேட்) அமைப்பு, 'தூய்மையான இஸ்லாம்' என்ற பெயரில் உலகம் முழுக்க இஸ்லாமிய இளைஞர்களை தன்னகத்தே சுவீகரித்துக் கொண்டது. இதனால், ஏராளம முஸ்லீம் இளைஞர்கள் ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்தனர். பழைமைவாதிகள் நிறைந்த ஐ.எஸ் அமைப்பு, தன் கட்டுப்பாட்டில் வசித்த மக்களை வதைத்தது. சிரியாவில் 34,000 சதுர கி.மீ பரப்பளவையும் கைப்பற்றியது. பத்திரிகையாளர்களின் தலைகளையும் விட்டு வைக்கவில்லை. மக்கள் தலையைத் துண்டிப்பதெல்லாம் ஐ.எஸ்க்கு ஐஸ்க்ரீம் சாப்பிடுவது போன்றது. இந்த அமைப்பின் தலைவர்தான் அபுபக்கர் அல் பாக்தாதி. இஸ்லாமிய மக்களைக் காக்க வந்த 'கலிபா' என்றும் தன்னை அறிவித்துக் கொண்டவர் இவர். பின்லேடனுக்குப் பிறகு, அமெரிக்காவால் அதிகமாகத் தேடப்பட்டவர்.

ஒபாமாவுக்கு பின்லேடன் என்றால், டொனால்டு ட்ரம்புக்கு பாக்தாதி எனலாம். பாக்தாதியின் உயிருக்கு இலங்கை மதிப்பில் 400 கோடி விலை அறிவிக்கப்பட்டது. குர்து ஆதரவு, சிரியப் படைகளுக்கும் பாக்தாதிக்கும் ஜென்மப் பகை. குர்துக்களுடன் அமெரிக்கா கைகோத்தது. எப்படியாவது பாக்தாதியின் கதையை முடித்துவிட வேண்டும் என்று குர்துக்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தனர். குர்து ஒற்றர்கள்தான் பாக்தாதியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தனர். சிரியாவில் இட்லிப் மான்காணத்தில் பரிஷா என்கிற கிராமத்தில் உள்ள வீட்டில் சந்தேகத்துக் கிடமான நடவடிக்கைகள் இருப்பதை குர்து புலனாய்வுத் துறையினர் அறிந்தனர். வீட்டை தீவிரமாக நோட்டமிட்டனர். அந்த வீட்டில் ஐ.எஸ் இயக்கத் தலைவர் பாக்தாதி வசிப்பதாக உறுதியான தகவல் கிடைத்தது. உடனடியாக, சி.ஐ.ஏ வுக்குத் தகவல் பறந்தது. சுறுசுறுப்பானார் ட்ரம்ப். ஏற்கெனவே பல பிரச்னைகளில் பெயர் கெட்டுப் போயிருந்த ட்ரம்புக்கு, பாக்தாதி கிடைத்த விஷயம் வான்கோழி சாப்பிடுவது போலாயிற்று. சொல்லப்போனால், ஏதாவது ஓர் அதிரடியைச் செய்து அமெரிக்க மக்களிடம் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்பதுதான் ட்ரம்பின் திட்டம். பாக்தாதி பற்றிய தகவல் கிடைக்கவும் 'கதையை முடித்துவிடுங்கள்' என வாஷிங்டனிலிருந்து கிரீன் சிக்னல் பறந்தது. பாக்தாதிவீடு மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம், டிரம்ப்புக்கும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. பின்லேடன் வேட்டையை ஒபாமா பார்த்ததுபோல், பாக்தாதி வேட்டையாடப்படுவதை ட்ரம்ப் பார்த்து ரசித்தார். இப்போது அந்த வீடியோ பகிரங்கமாகவே வெளியிடப்பட்டிருக்கிறது.

ஒக்டோபர் 26—ம் திகதி இரவு... வடக்கு ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானப்படை தளம் சுறுசுறுப்பானது. இங்கேயிருந்து அமெரிக்காவின் 70 எலீட் டெல்டா குழுவைச் சேர்ந்த அதிரடிப்படை வீரர்கள், எட்டு ஹெலிகொப்டர்களில் பாக்தாதி இருந்த கிராமத்தை நோக்கிப் விரைந்தனர். அதிரடிப்படை வீரர்களுடன் பயிற்சி பெற்ற நான்கு ராணுவ நாய்களும் பாக்தாதியை வேட்டையாடச் சென்றன. ரேடார்களில் ஹெலிகொப்டர்கள் சிக்காமல் இருக்க, மிகவும் தாழ்வாகப் பறந்தன. அதிரடிப்படை வீரர்கள், இரவில் நன்றாகப் பார்க்கக்கூடிய கண்ணாடிகள் அணிந்திருந்தனர்.

பாக்தாதி இருந்த வீட்டை அடைந்ததும், நான்கு ஹெலிகொப்டர்கள் தாக்குதலில் ஈடுபட்டன. ஒரு ஹெலிகொப்டர் அதிரடியாக குண்டு வீசி, மதில் சுவரைத் தகர்த்தது. அதே வேளையில், வீட்டின் மொட்டைமாடியில் வீரர்கள் கயிறு வழியாகக் குதித்தனர். பாக்தாதியும் அவரின் பாதுகாவலர்களும் பதில் தாக்குதல் நடத்த முயன்றனர். பாக்தாதியைத் தப்பவைக்கும் முயற்சியில், ஒன்பது ஐ.எஸ் தீவிரவாதிகள் மடிந்துபோக, பாக்தாதி தன் மூன்று குழந்தைகளுடன் அங்கேயும் இங்கேயும் ஓடினார்.

பாக்தாதியின் பின்னாடியே அமெரிக்கப் படையினரின் நாய்களும் துரத்திக்கொண்டு ஓட... பாக்தாதியின் கடைசி விநாடிகள் கொடூரமாகவே இருந்தன. நாய்களிடம் கடிபட்டுச் சாவதா... அமெரிக்க வீரர்களின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாவதா அல்லது உடலில் கட்டியுள்ள வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்யவா எனத் தவித்துள்ளார். இறுதியில் தப்பிக்க வழி தெரியாமல், குண்டுகளை வெடிக்கச்செய்து மூன்று குழந்தைகளுடன் உயிரை மாய்த்துக்கொண்டார் பாக்தாதி. அந்தச் சமயத்தில் அவர் கதறி அழுதிருக்கிறார். இதைத்தான் டிரம்ப், 'பாக்தாதி, ஒரு கோழைபோல் செத்தான்' எனக் குறிப்பிட்டார். பாக்தாதியின் சிதறிப்போன உடல் பாகங்களைச் சேகரித்த அமெரிக்கப் படை, அவற்றை கடலில் வீசியது. இஸ்லாமிய முறைப்படி இறுதிச்சடங்கு செய்ததாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. பாக்தாதியின் ஆடைகள், இரண்டு குர்து ஒற்றர்கள் வழியாக அமெரிக்கப் படைகளுக்குக் கிடைத்தன. ஆடைகளேவைத்தே, கொல்லப்பட்டது பாக்தாதிதான் என்பது உறுதியானது. கிழக்கு சிரியாவில் தொடங்கி பாக்தாதியின் ஒவ்வொரு நகர்வையும், அவர் வசித்த வீடு, சுரங்கம் உள்ளிட்ட கட்டமைப்புகளையும் கண்காணித்து சி.ஐ.ஏ—வுக்கு துல்லியத் தகவல் கொடுத்தது குர்து ஒற்றர்கள்தான். இவற்றை வைத்தே உலகின் அதிபயங்கரமான மனிதரின் கதையை முடித்தது அமெரிக்கா. பாக்தாதிகள் கொல்லப்படுவதைக் காட்டிலும் உருவாகாமல் தடுப்பதே நல்லது!

## இந்தியாவில் இணையம் வழியாக தீவிரவாதிகள் சேர்ப்பு

### அமெரிக்கா அறிக்கை

வாட்ஸ் அப் போன்ற சமூக வலைதளங்களை பயன்படுத்தி தீவிர வாதிகள் தேர்வு செய்யப்படுவதற்கு இந்தியா கவலை கொண்டுள்ளதாக அமெரிக்காவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோர்களின் வாட்ஸ் அப் தகவல்களை இஸ்ரேல் நிறுவனம் உளவுபார்த்து அதை பல்வேறு நிறுவனங்களுக்கு விற்றுள்ளதை வாட்ஸ் அப் கண்டுபிடித்துள்ளது. இது தொடர்பான செய்தி சமீபத்தில் வெளியானது. இந்த நிலையில், கடந்த 2018ம் ஆண்டுக்கான தீவிரவாத அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது.

அதில் இந்தியா பற்றி கூறப்பட்டுள்ளதாவது: வாட்ஸ் அப் போன்ற சமூக வலைதளங்கள் மற்றும் செய்தி ஆப்கள் மூலம் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுவதற்கு இந்திய அதிகாரிகள் தனது கவலையை தெரிவித்துள்ளனர். ஆன்லைனில் தீவிரவாதிகள் தேர்வு செய்யப்படுவதை தடுப்பது தொடர்பாக இந்திய உள்துறை செயலாளர் மற்றும் அந்த துறையின் அதிகாரிகளும் சர்வதேச சமூகவலைதள நிறுவனத்தின் பிரதிநிதிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினர். இருப்பினும், ஆன்லைன் மூலம் தீவிரவாத இயக்கங்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு ஆப்கானிஸ்தானில் உள்ள ஐஎஸ் இயக்கத்துக்கு அனுப்பப்படுகின்றனர்.

பாகிஸ்தானை மையமாகக் கொண்டு செயல்படும் தீவிரவாத அமைப்புகள், பழங்குடியினர், மாவோயிஸ்ட்கள், இந்தியா மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். காஷ்மீரில் எல்லை தாண்டி வந்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனாலும், எல்லையில் இந்தியா தொடர்ந்து தீவிரவாதிகள் கண்டறிதல், அவர்களை ஒழித்தல், தீவிரவாத அமைப்புகளை சிதைத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த 2018ம் ஆண்டில் தீவிரவாதத்துக்கு எதிராக தீவிர ஒத்துழைப்பை கோருதல் மற்றும் அமெரிக்காவுடன் தீவிரவாத தகவல்களை இந்தியா பகிர்ந்தும் கொண்டுள்ளது.

கடந்த 2018ம் ஆண்டில் காஷ்மீர் மாநிலம் தீவிரவாதத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும், மத்திய இந்தியாவில் மாவோயிஸ்ட் இயக்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதை தொடர்ந்து, இவற்றை இந்தியா கண்டறிந்து அதை ஒழிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டிவருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ட்ரோன் மூலம் தாக்குதல்



அரேபிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தாக்குதல், இலண்டன் விமான நிலைய தாக்குதல் என்று சிறியரக ட்ரோன்களால் பெரிய பாதிப்பை ஏற்படுத்த முடிகிறது. இதை தடுக்க, அண்மையில் ரேதியான் என்ற இராணுவ தளவாட நிறுவனம், லேசர் கதிர் பாய்ச்சும் பீரங்கியை உருவாக்கியுள்ளது. இந்த கருவியை, அமெரிக்க இராணுவம் பரிசோதனை அடிப்படையில் தற்போது வாங்கிஉள்ளது. வானில் சில ஆயிரம் அடிகள் வரை பறக்கும் சிறிய ட்ரோன்களை, இந்த பீரங்கி அடையாளம் கண்டு லேசர் கதிர்களை பாய்ச்சும். கதிர் பாய்ந்ததும், ட்ரோன் செயல் இழந்து தரையில் வீழ்ந்துவிடும்.

ஒரு முறை லேசர் கதிரை பாய்ச்ச, 1 டொலர் மட்டுமே செலவு ஆகும். மேலும், மின்சாரம் தரும் சாதாரண ஜெனரேட்டர் இருந்தால் போதும், இந்த ட்ரோன் கொல்லும் லேசர் பீரங்கி ஓய்வில்லாமல் செயல்படும் திறன் பெற்றுவிடும். ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் தாக்குவதும், அதைவிடக் குறைவான நேரத்தில் ட்ரோனை அடையாளம் கண்டு குறிவைக்க முடிவதும், இந்த பீரங்கியின் சிறப்பம்சம்.


## சூரிய ஒளியும் குடலும்

நம் தோலின் மீது தினமும் சிறிதளவாவது சூரிய ஒளி படவேண்டும் என்பது மருத்துவர்கள் சொல்வதுண்டு. ஆனால், தோல் மீது சூரிய ஒளிபடுவதற்கும், நம் குடலுக்குள் வசிக்கும் இலட்சக்கணக்கான நல்ல நுண்ணுயிரிகளுக்கும் நேரடி தொடர்பு இருப்பதை, முதல் முறையாக கனடாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர்.

சூரிய கதிரிலுள்ள புறஊதா கதிர்கள், தோலின் மீது படும்போது, விற்றமின்D, நம் உடலில் உற்பத்தியாகிறது. குடலில் உள்ள நுண்ணுயிரிகள் பல்கிப் பெருகுவதற்கு, இந்த விற்றமின்D மிகவும் அவசியம். இந்த வகையில் குடலின் ஆரோக்கியத்திற்கு, குறிப்பாக, குடலில் உள்ள நுண்ணுயிரிகளின் பல்லுயிர் பெருக்கத் தன்மைக்கு சூரிய ஒளி மிகவும் முக்கியம் என்பதை, மனித சோதனைகள் மூலம் கனடா விஞ்ஞானிகள் நிறுவியிருப்பதாக, 'பிரான்டியர்ஸ் இன் மைக்ரோபயாலஜி' இதழ் தெரிவித்துள்ளது.



## பிரேசிலின் அடுத்த தாக்குதல்?



அமேசன் காட்டில் மரங்களை அழித்து, நாட்டின் பழங்குடிகளை ஒழித்து, அந்தப் பகுதியை வணிக பூமியாக மாற்றும் முயற்சியை ஏற்கெனவே முன்னெடுத்திருக்கிறது பிரேசில் அரசு. அடுத்து, நாட்டில் பரம்பரையாக வாழ்ந்துவரும் 'குலாம்போ' இன மக்களை அழிப்பதற்கான வேலைகளிலும் களமிறங்கி உள்ளது.

17ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில், அமெரிக்க கண்டத்தில் அடிமை வர்த்தகம் அதிகமாக இருந்தது. அப்போது ஆப்பிரிக்கக் கறுப்பின மக்களில் சுமார் 95 இலட்சம் பேர் பிரேசிலுக்கு அடிமைகளாக அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 40 இலட்சம் பேர் பிரேசில் நாட்டின் பண்ணைகளில் வேலை செய்துவந்தனர். பிரேசிலில் 1888 ஆம் ஆண்டு அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ஆனாலும், அந்த மக்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டனர். அவர்களில் ஆயிரக்கணக்கானோர் பண்ணைகளிலிருந்து தப்பி மனித நடமாட்டமே இல்லாத பகுதியில் (வடக்கு பிரேசில்) ஒளிந்து வாழத் தொடங்கினர். அவர்களின் வாரிசுகள்தான் `குலாம்போ' என அழைக்கப்படுகின்றனர்.

பலகட்ட போராட்டங்களுக்குப் பிறகு, இந்த மக்களுக்கு அவர்கள் அனுபவித்த நிலங்கள் மீதான உரிமையை வழங்கியது பிரேசில் அரசு. அவர்களில் பெரும்பாலானோர் அட்லான்டிக் கரையோரம் இருக்கும் அல்கான்டராவில் வசிக்கிறார்கள். இவர்கள்தான், விவசாயத்துக்கும் மீன்பிடித் தொழிலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். முன்பு வேட்டைக்காரர்கள், மரக் கடத்தல் காரர்கள், மாட்டுப்பண்ணையாளர்கள், கனிம வளங்களைச் சுரண்டுபவர்கள் போன்றோர்தான் அமேசன் காட்டை அழித்து பூர்வகுடிகளை ஒழித்தார்கள். தற்போது, குலாம்போ இன மக்களை அழிக்கக் களமிறங்கியிருப்பவை, செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தும் அமெரிக்க நிறுவனங்கள். விண்ணில் ரொக்கெட்டை ஏவுவது, உலகின் 260 பில்லியன் டொலர் வர்த்தகம். ஐரோப்பிய நாடுகள்தான் இந்தத் தொழிலில் கோலோச்சி வருகின்றன. பூமத்தியரேகைக்கு 345 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் கினியா தீவுகளிலிருந்துதான் பல நாடுகளின் ரொக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்படுகின்றன. கினியா, பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

அட்சரேகைக்கு அருகில் இருக்கும் கலிஃபோர்னியாவிலிருந்து அமெரிக்கா ரொக்கெட்டைச் செலுத்திவருவதால், செலவு அதிகமாகிறது. அதனால், அமெரிக்காவால் ஐரோப்பிய நாடுகளோடு போட்டிபோட முடியவில்லை. எனவேதான், அல்கான்டராமீது கண்வைத்திருக்கிறது. பூமத்தியரேகைக்கு 140 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது அல்கான்டரா. இந்தப் பகுதி பூமத்திய ரேகைக்கு மிகவும் அருகில் இருப்பதால், இங்கிருந்து ரொக்கெட்களை ஏவினால், விண்வெளியைச் சென்றடையும் நேரமும் எரிபொருள் செலவும் கணிசமாகக் குறையும். இதற்காக, கடந்த மார்ச் மாதம் பிரேசிலுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுள்ளது அமெரிக்கா.

1980—ம் ஆண்டு பிரேசில் அரசு அல்கான்டரா வில் ஏற்கெனவே ஒரு சிறிய ராக்கெட் ஏவுதளம் அமைத்தபோதே நூற்றுக்கணக்கான குலாம்போ மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் விரட்டப்பட்டனர். அந்த ஏவுதளத்தின் கட்டுப்பாட்டில் 9,000 ஹெக்டேர் நிலம் உள்ளது. ஏவுதள விஸ்தரிப்பு என்ற போர்வையில் குலாம்போ இனமக்களை தற்போது விரட்டத் தொடங்கியுள்ளதோடு, `இதெல்லாம் பொருளாதார வளர்ச்சிக்காகத்தான்' என்று கூசாமல் சொல்லிவருகிறது பிரேசில். அழிவின்மீது கட்டமைக்கப்படும் வளர்ச்சி நிச்சயம் நன்மை பயக்காது என்பதை, எப்போது பிரேசில் புரிந்துகொள்ளுமோ!